# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 07 அதிர்வு 81 பங்குனி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162













**ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்**


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au www.srikumaran.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# இலங்கையில் அடிவாங்கும் ‘லைகா’

லைகா’ என்றதும் நமது நினைவுக்கு வருவதென்ன? அது உலகளாவிய தொலைத் தொடர்பு நிறுவனம். ஈழத்தமிழர் ஒருவர் அதன் உரிமையாளர். தமிழக சினிமாவிலும், இந்திய சினிமாவிலும் தவிர்க்க முடியாத தயாரிப்பு சக்தியாக மாறிவிட்ட கம்பெனி. இதையெல்லாம் கடந்து, பொருளாதாரச் சரிவினால் சிக்கிச் சின்னாபின்னமாகிக்கொண்டிருக்கும் நாடொன்று, லைகா நிறுவனத்தைக் கதிகலங்கவைத்திருக்கின்ற கதை தெரியுமா? மேலே வாசியுங்கள். சொல்கிறேன்.

லைகா தமிழக சினிமாவில் கால்வைக்க முன்னர், தன் சொந்த நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றே புறப்பட்டது. லைகா நேரடியாகவும், ஞானம் பவுண்டேசன் என்கிற தொண்டு நிறுவனம் ஊடாகவும் போரினால் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு பகுதிகளில் அதிகளவான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. வாழ்வாதார உதவிகள், வீட்டுத்திட்ட உதவிகள் என அதன் பட்டியல் மிக நீளமானது. இவ்வாறு மக்கள் பணியாற்றிக்கொண்டிருந்த லைகா நிறுவனம், வவுனியா வடக்கில் இருக்கின்ற நயினாமடு கிராமத்தில் பெருமளவு காடுகளை அழித்து, பிரமாண்டமான நவீன கிராமம் ஒன்றை உருவாக்கும் பணியை ஆரம்பித்தது. போரினால் இடம்பெயர்ந்து சென்று, காணிகளற்ற நிலையில் தொடர்ந்தும் செட்டிகுளம், மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்ற மக்களை இந்த நவீன கிராமத்தில் மீள்குடியேற்றுவதே திட்டம். வேலைகள் ஆரவாரமாக - பெரும் எதிர்பார்ப்பில் நடந்தன. இந்தப் பணிகள் எல்லாவற்றையும் சரியாகச் செய்துகொண்டு வந்த லைகா, கிராமத்தின் திறப்பு விழாவுக்கு சந்திரிகாவை அழைத்தமைதான் பிரச்சினையாகி நின்றது. என்னதான் நல்ல வேசம் போட்டுவந்தாலும், சந்திரிகா அம்மையாரையும், அவர் செய்த அட்டூழியங்களையும் தமிழர்கள் அவ்வளவு இலகுவாக மறக்கமாட்டார்கள். எனவே லைகா சந்திரிகாவை நயினாமடுவுக்கு அழைத்துவருவதைக் கடுமையாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்பினாலும், சந்திரிகா பின்னர் நல்லாட்சி அரசமைப்பதில் பிசியாகியதாலும், திறப்புவிழா ஏற்பாடுகள் கைவிடப்பட்டன. லைகாவும், அரைகுறை வேலையுடன் தான் அமைத்துவந்த நவீன குடியிருப்பு பணிகளை நிறுத்திக்கொண்டது. நல்லாட்சிக் காலத்தில் இலங்கையில் பெரிதாக எதனையும் செய்யவில்லை. தமிழக சினிமா பக்கம் போய்விட்டது.

நல்லாட்சி நிறைவுற்று, கோட்டபாய ஆட்சி பீடமேறி, நாட்டை நாசமாக்கியதும், சிங்கள பெரும்பான்மைவாத அரசு மீளெழுச்சி பெறுவதற்குப் புலம்பெயர் தமிழர்களின் நிதி அத்தியாவசியமாகியது. எனவே புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளைக் கூவிக்கூவி அழைத்தது இலங்கை அரசு. இந்தக் கூவுதலை “எதைச்சொன்னாலும் அப்பிடியே நம்புறான்யா” பேர்வழியாக நம்பி வந்து மீளக் கால்வைத்தது லைகா. வரவேற்பெல்லாம் அமோகமாக இருந்தது. பிக்குமார் தம் விகாரைக்கு லைகா உரிமையாளரை அவரது குடும்பத்தாருடன் அழைத்து, பிரித் ஓதி, வெள்ளை நூல் கட்டிக் கொண்டாடினார்கள். இதெல்லாம் வெறும் கனவுதான் என்பதை நம்பாத லைகா நிறுவனம், இலங்கையில் முதலீடுகளைச் செய்யவும், ரூபாவாஹினி, தொலைத்தொடர்புகள் சேவை மாதிரியான நட்டத்தில் இயங்கிய சில அதிகாரசபைகளை குத்தகைக்கு எடுக்கவும் தீர்மானித்தது. ஆரம்பத்தில் இதற்கு உடன்பட்ட ஜனாதிபதி ரணில் உள்ளிட்ட சிங்கள அரசியல்வாதிகள், வழமைபோன்று தமது வேலையைக் காட்டத்தொடங்கினர். “எனக்கு விருப்பம். அவன்தான் விடுறானில்லை” என்ற வழமையான பாணியில், விமல் வீரவன்சக்களை களத்தில் இறக்கிவிட்டனர். புலம்பெயர் புலிகள் நாட்டை விலைக்கு வாங்கப் போகின்றனர் என்ற பரப்புரை சிங்கள மக்கள் மத்தியில் சூடுபிடித்தது.

லைகா வைத்த முன்நிபந்தனையின் அடிப்படையில்தான் தமிழ் அரசியல் கைதிகள் பலர் விடுவிக்கப்பட்டனர் என்றும், அவர்களில் ஆளுக்குத் தலா 25 லட்சம் பண உதவியை லைகா நிறுவுனர் சுபாஸ்கரன் வழங்கிவைத்தார் என்றும், இதோ புலிகள் மீள உருவாக புலம்பெயர் தமிழர்கள் உதவுகிறார்கள் என்றும் சிங்களத்தரப்பு வாதங்கள் சூடுபிடித்தன. எனவே லைகாவிடம் கறக்க வேண்டியதைக் கறந்துகொண்டு கழற்றிவிடுவதுதான் சிறந்தவழி என்கிற முடிவுக்கு தெற்கு வந்தது.

மறுபுறத்தில், இதற்குச் சாதகமான இன்னொரு பழமும் அரசின் பக்கம் கனிந்து வந்தது.

லைகா நிறுவனத்தின் உரிமையாளர் சுபாஸ்கரன் அவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நெருக்கம் ஏற்பட ஜனாதிபதியின் நெருக்கமான ஆலோசகர் ஒருவர் இருந்தாலும், ரெலிக்கொம்மை வாங்குவதற்கு வாங்குவதற்கு சுபாஸ்கரன் காலடி எடுத்துவைத்தபோதுதான் அவருக்கு சிக்கல்கள் ஆரம்பித்தன. அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசிய முக்கியமான விடயமே லைகாவுடன் தொடர்புபட்டதுதான். ரெலிக்கொம் நிறுவனத்தில் முதலிட இந்திய நிறுவனம் ஒன்று முன்வந்திருப்பதாகக் கூறிய நிதியமைச்சர், இந்த நிறுவனம் சில பாதுகாப்புக் காரணங்களுக்காகவும் வெளிச்சக்திகளிடம் செல்லக்கூடாதெனக் கூறியிருக்கின்றார்.

அதேபோல தனியார் மருத்துவமனையான லங்கா ஹொஸ்பிடலில் முதலீடு செய்யவும் லைகா கேட்டிருந்தது. ஆனால் அதனையும் இந்தியா எதிர்த்தது. முன்னாள் அப்பலோ மருத்துவமனைதான் பின்னாளில் லங்கா ஹொஸ்பிடலாக மாறிய கதை நம்மில் அனேகம்பேருக்குத் தெரியுமல்லவா. எனவே அந்த மருத்துவமனையை மீண்டும் அப்பலோவிடம் கையளிக்க வேண்டும் என்ற நிபந்தனையை இந்தியா விதித்தது.

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க இந்த இரண்டையும் லைகாவுக்குத் தருவதாக உறுதியளித்திருந்தாலும், இந்திய நிதியமைச்சர் இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட்டிருப்பதால், அவரால் அதற்கு மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. அதன் பின்னரே லைகா நிறுவனத்தை முற்றாக ஒதுக்கத் தொடங்கினார் ரணில். “சிவனே” என்றிருந்த லைகாவை இலங்கையில் முதலிட வருமாறு வலிந்து அழைத்த ரணில், இந்தியாவின் அழுத்தம் காரணமாக தனது நடவடிக்கைகளைக் கைவிட்டார்.

இப்படியாக லைகாவைக் கையாள இந்திய எதிர்ப்பைக் கையிலெடுத்த ரணில், சுபாஸ்கரனை சந்திப்பதைக் கூடத் தவிர்த்தார். அண்மையில் ரணில் விக்கிரமசிங்க உகண்டா சென்றிருந்த வேளை அவரைச் சந்தித்துவிட வேண்டும் என்ற நோக்கோடு, அங்கு சென்றார் சுபாஸ்கரன். அங்குள்ள இலங்கைக்கான தூதுவர் கணநாதனைத் தொடர்புகொண்டு, ஜனாதிபதியின் உகண்டா நிகழ்வில் கலந்துகொள்ள அனுமதிக்குமாறு கேட்டார். இதனைத் தனியாகத் தீர்மானிக்க முடியாது என்பதால், கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சை தொடர்புகொண்டார் தூதுவர். ஆயினும், ஜனாதிபதியின் நிகழ்வுக்கு அனுமதி வழங்கினாலும், ஜனாதிபதியுடன் அங்கு வர்த்தக ரீதியான அல்லது தனிப்பட்ட விடயங்களைப் பேச அனுமதி வழங்கப்போவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயம் ஜனாதிபதிக்கும் சொல்லப்பட்டது. உடனடியாகவே லைகா நிறுவனத் தலைவருடன் வர்த்தக விடயங்களைப் பேச முடியாது என ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். எனவே சுபாஸ்கரனின் உகண்டா பயணமும் பிரயோசனமில்லாமல் போனது.

ரணிலுடன் இப்படியொரு பிரச்சினை ஓடிக்கொண்டிருக்கும்போதே, ‘அருணளு ஜனதா கட்சி’ என்ற ஒரு கட்சியை லைகா சுபாஸ்கரன் வாங்கியமையும் ரணிலுக்கு விசனத்தை ஏற்படுத்தியது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் வாக்குகளை உடைக்க தனித் தமிழ் வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதே இதன் இலக்கு என ஜனாதிபதி தரப்பிற்கு சுபாஸ்கரன் தரப்பு சொல்லியிருந்தாலும், அதனை ரணில் ஏற்கவில்லை. அந்த அரசியல் கட்சியும் தனக்கு எதிராகப் பயன்படுத்தப் படவுள்ளதாக கருதிய ரணில், தனது கோபத்தை மீண்டும் வெளிப்படுத்தத் தொடங்கினார்.



இதன் உச்சக்கட்டமாக, கடந்த ஆறுமாதகாலமாக லைகா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் ’சனல் ஐ’ அலைவரிசை மீதான கால நீட்டிப்புக்கான கோரிக்கையை அமைச்சரவை நிராகரித்துவிட்டது. இதேவேளை ’சனல் ஐ ’அலைவரிசையை லைகா நிறுவனத்திற்கு முறைப்படியாக வழங்கவில்லை எனத் தெரிவித்து, லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவும் விசாரணையை ஆரம்பித்துள்ளது. இதற்கெல்லாம் எதிராக லைகா நிறுவனமும் தக்க சான்றுகளுடன் வழக்குத் தொடர்ந்திருக்கின்றது.

இவ்வாறு தெற்கு விரித்த மாயவலையில் சிக்கி சின்னாபின்னமாகிக்கொண்டிக்கும் லைகா நிறுவனம், இந்தப் பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்காக, தமிழர்களின் ஆதரவையும் தன்னைநோக்கித் திரட்டுவதற்கான வேலைத்திட்டங்களில் இறங்கியிருக்கின்றது. நீண்ட இடைவெளியின் பின்னர் வடக்கிற்கு வாழ்வாதார உதவிகளுடன் களமிறங்கிய லைகாவின் ஞானம் பவுண்டேசன், வறிய மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருக்கின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் சில குளங்களைப் புனரமைக்க உடன்பட்டிருக்கின்றது. கடந்த வாரம் ரகசியமான முறையில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த லைகா உரிமையாளர் சுபாஸ்கரன் யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர்மட்டத்தினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்திச்சென்றுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் சொல்வது ஒன்றைத்தான். ஈழத்தமிழர் விடயத்தில் சிறீலங்காவும் சரி, இந்தியாவும் சரி எப்போதும் ஒரே மாதிரித்தான் நடந்துகொள்கின்றன. ஆனால் இதனை விளங்கிக்கொள்ளாத தமிழர்கள்தான் அடிக்கடி கறிவேப்பிலையாக மாறிப்போகின்றனர். ■





மெல்பேர்ன் பக்கினம் ஸ்ரீ சுப்ரமணிய ஆலயத்தில்
ஷண்முகர், சிவன் பெருமாள்
மஹா கும்பாபிஷேகம்
Melbourne Pakenham Shri Subragmanya Temple
Shanmukar, Shiva & Perumal
Maha Kumbabishekam
Consevration Ceremony:
12.05.2024 Morning, 9.00 am
Address : 324, Preey Rd, Keysboraugh, VIC 3173
திகதி : 11.05.2024 (சனிக்கிழமை )
நேரம் : காலை 9.00 மணி
கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம்
லக்ஸ்மி ஹோமம், தான்யாதி வாசம்
மாலை 4.00 மணிக்கு ஜலாதி வாசம்
மக்கள் முருக பெருமானுக்கு அபிசேகம் செய்யலாம்
சுவாமி கண் திறத்தல் யாக பூஜைகள் நடைபெறும்.
திகதி : 12.05.2024 (ஞாயிற்றுக்கிழமை )
நேரம் : காலை 8.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பம்
9.00 – 10.00 மணிக்குள் கும்பாபிஷேகம் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து ஷண்முகார்ச்சனை ஷண்முகர் திருநடனம்
நடைபெற்று அர்ச்சனைகள் தொடர்ந்து அன்னதானமும்
இடம்பெறும்.
தொடர்புகள் / Contact - 0403685413
இடம் / Address - 324, Perry Rd, Keysborogh VIC 3176
GAA Gaelic park

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:07 அதிர்வு: 80 பங்குனி 2024 தொ.பே:1800 960 162

## சாந்தனை ஏன் அஞ்சலிக்கவில்லை?

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி ராஜீவ் கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் அதுவே ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு, 33 வருடங்கள் சிறைப்பறவையாக வாழ்ந்த சாந்தன் சிறைக்கதவுகளால் – நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார். இனி சாந்தனின் வாழ்வில் வசந்தம் துளிர்க்கும், தாயின் பேரன்பில் அவர் திளைக்கலாம், அந்த அன்னையின் நீண்டகாலத் தவத்தை முடிவுக்கு கொண்டு வரலாம் என்பன போன்ற பல எதிர்பார்ப்புகள் எல்லோரிடத்தும் இருந்தன. ஆயினும், அந்தச் 'சுதந்திரப்பறவையின்' இறக்கைகள், இலங்கை நோக்கி விரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் மீண்டும் மீண்டும் மறுக்கப்பட்டுக் கொண்டேயிருந்தன. சாந்தன் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதால், அவர் சட்டவிரோதக் குடியேற்றத்தின் கீழான ஏற்பாடுகளின் கீழ் அனுகப்பட்டார். மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட சிறை வாசத்தின் பின்னான விடுதலைக்குப் பின்னரும் அவருக்குக் கிட்டியதெல்லாம் சிறப்புமுகாம்தான். மறுக்கப்பட்ட மருத்துவம், நெருக்கடியான வாழ்வு, சுகாதார வசதியற்ற வாழ்க்கைமுறை, குறுகிய அறை என தினந்தினம் நோயாளியாக மாறிக்கொண்டிருந்த சாந்தன் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டு – அவதியுற்று பெப்ரவரி 28 ஆம் திகதி காலை மாரடைப்பால் மரணடைந்தார்.

மறதி ஒரு தேசிய வியாதியென்பர். தமிழ்த் தேசிய இனத்துக்கு அந்த வியாதி ஒப்பீட்டளவில் கொஞ்சம் அதிகம்தான். இந்திய உச்சநீதிமன்றம் சாந்தன் உள்ளிட்டவர்களை விடுவித்த பின்னர், அவர்களில் இலங்கையைச் சேர்ந்தவர்களின் சிறைவாசத்துக்குப் பின்னரான விடுதலைக்காக தாயகத்தினரும் தமிழ்த் தலைமைகளும் அவ்வளவு அலட்டிக்கொண்டதாக இல்லை. சாந்தனின் இறுதிக்காலத்தில் ஓரிரு வலியுறுத்தல்கள் – நகர்வுகள் எடுக்கப்பட்டிருந்தனவே அன்றி அதைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இவர்களின் விடயங்கள் பொதுவெளியில் பேசப்பட்ட சந்தர்ப்பங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாயின், தமிழ்த் தலைவர்கள் சிலர் 'இந்தியாவின் நலன்களைக் கருத்திற்கொண்டுதான் சீனத்தின் உறவைத் தீர்மானிக்க வேண்டும்' என்று வலியுறுத்தியிருந்த அளவுக்கேனும் சாந்தன் உள்ளிட்ட எம்மவர்களின் விடயத்தில் பேசா மடந்தைகளாக, 'கடைகெட்ட அரசியலை' இறுகப் பிடித்தபடிதான் இருந்தனர்.

அரசியல்வாதிகள் தான் இப்படியென்றால், புலம்பெயர் தமிழர்களும் சாந்தனின் சாவுக்கு பின்னரும் மௌனத்தையே அடைகாக்கின்றனர். சாந்தனின் இந்த 33 வருடங்களும் நீதிக்கான போராட்டத்தைச் சுமந்திருந்தன. ஒரு வல்லரசின் இரும்புக்கோட்டையான சட்டத்தின் முன்னால் ஏதுமற்ற நிராயுதபாணியாக சாந்தனும் சக தோழர்களும் நிகழ்த்திய போராட்டம் மிக நீண்டது, புனிதமானது. அப்படிப்பட்ட ஒரு மனிதனை இந்திய– இலங்கை அரசாங்கங்கள் திட்டமிட்டு, இயற்கைமுறையில் கொன்றபோது, புலம்பெயர் சக்திகள் பேரெழுச்சியோடு இந்த அநியாயத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்திருக்க வேண்டும். ஈழத்தமிழர்களின் ஆத்ம பலமாக இப்போதிருக்கும் புலம்பெயரிகள், சாந்தனுக்கு தாம் வாழும் நாடுகள்தோறும் அஞ்சலி நிகழ்வுகளை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் மிக அரிதாகவே புலம்பெயர் தேசங்களில் சாந்தனுக்கான நினைவுகூர்தல் இடம்பெற்றிருக்கிறது. ஏன் புலம்பெயரிகளிடம் இந்தக் கள்ள மௌனம்?

சாந்தன் இறந்துவிட்டதாலும், அவர் ஒரு தனிமனிதன் என்பதாலும், அவருக்கு அஞ்சலி செலுத்துவதால் பணமோ, புகழோ எவருக்கும் கிடைக்கப்போவதில்லை. எனவே எந்த லாபமும் இல்லாத அஞ்சலிப்பை ஏன் செய்யவேண்டும் என புலம்பெயரிகள் நினைத்திருக்கக் கூடும். லாப நட்டங்கள் பார்த்துத்தான் இப்போது பல இடங்களில் மாவீரர்நாளைக் கூட கூறுபோட்டு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைவிட புலம்பெயரிகள் பலரும் இலங்கைக்கு அடுத்தபடியாக அதிகம் செல்லும் நாடு இந்தியா. சாந்தனுக்கு அஞ்சலி செலுத்தினால், சிலவேளைகளில் தமது இந்தியச் சுற்றுலாக்களுக்கு ஆபத்து வந்துவிடுமோ? விஸா மறுக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் புலம்பெயரிகளுக்கு இருக்கக்கூடும். தாயகத்துக்கு மக்களின் ஆன்மாவாகவும், ஒற்றை நம்பிக்கையாகவும் இருப்பது இப்போதைக்கு புலம்பெயர் தமிழர்களே. அவர்களே இப்படி சாந்தனைப் புறக்கணித்தல் என்பது, சாந்தனின் தியாகத்தை மட்டுமல்லாது, தாயக மக்களின் கனவுகளையும் சாகடிப்பதற்கு ஒப்பானதே.

# இன்னும் இரு தலைமுறைகளுக்குப் பின் தமிழ்மொழி அழியும் அபாயம்!

## ஆஸியில் தமிழீழம் சாத்தியமா?

**தொடர்ந்து பல வருடங்களாக தமிழ்க்கல்வி, மூத்தோர் சேவை, மனநல வழிகாட்டி என்று பல்வேறு களங்களில் தொண்டாற்றி வருபவர் முனைவர். மாலினி ஆனந்தகிருஷ்ணன். 'எதிரொலிக்காக' காணொளி வாயிலாக அவர் வழங்கிய நேர்காணல் இது.**

நேர்கண்டவர்:



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி



**எதிரொலி : வணக்கம். உங்கள் கல்வி, பின்புலம், எவ்வாறு இந்த சமூக சேவை புரியவேண்டுமென்று ஆர்வம் ஏற்பட்டதென்று சொல்ல முடியுமா ?**

மாலினி: நான் முதலில் ஒரு விஷயத்தை தெளிவுபடுத்திக் கொள்கிறேன் நான் செய்யும் செயல்களை எதுவும் சேவையென்று கருதி செய்வது கிடையாது. எல்லோருக்கும் சந்தோசம் கிடைக்க பல வழிகளில் கிடைக்கும் இல்லையா. எனக்கு சிறுவயதிலேயே என் சந்தோசம் இதில் இருக்கிறது என்பதற்கான தெளிவு கிடைத்துவிட்டது. சிறுவயதிலேயே மற்றவர்களுக்கு உதவியளித்து அவர்கள் உயர்வடையும்போது என் மனம் குதூகலமடைந்து பேரின்ப நிலையை எட்டியது. எனக்கான தேடல் என்பதற்கான தெளிவு அப்போதே கிடைத்துவிட்டதால் ,அதையே தொடர்ந்து செய்துவருகிறேன். சுற்றியிருப்பவர்களை சந்தோசமாக வைத்துகொள்வேதே என் சந்தோசம். அதை சேவை என்று சொல்லிக்கொள்ளமாட்டேன்.

**எதிரொலி : இப்படியாக மற்றவர்களுக்கு உதவிபுரிவது உங்களது சந்தோசமெனினும், சிறுவயதில் யாராவது உங்களுக்கு ஊன்றுகோலாகவோ அல்லது குறிப்பிட்ட தாக்கத்தினை ஏற்படுத்தினார்கள் என்று கூற முடியுமா?**

மாலினி : எனக்கு குறிப்பாக யாருடைய தாக்கமும் கிடையாது. எல்லோரிடமும் நல்ல விஷயங்களை கற்றுக்கொள்வது எனது இயல்பு. சிவாஜி பாடலில் வருவது போல், "பாசமுள்ள மனிதர்களிடையே கடவுள் வாழ்கிறார் .அவர் கருணையுள்ள நெஞ்சினிலே கோயில் கொள்கிறார்". எனது பயணத்தில் ஆன்மீக நோக்கில் செல்லும்போது, கடவுள் எங்கு இருக்கிறாரென்ற தெளிவு கிடைக்கிறது. என்னுடைய இந்தப் பயணத்தின் நோக்கமும் நிறைவேறுகிறது.

**எதிரொலி : மனநலம் சார்பான உங்கள் பணிகள் பற்றி இணையத்தில் படித்திருக்கிறேன். அது பற்றி சொல்ல முடியுமா? குறிப்பாக கோவிட தொற்றுக்காலத்தில் எவ்வாறு செயல்பட்டீர்கள் ? எவ்வாறெல்லாம் மக்களுக்கு பயனுள்ளதாக இருந்தது.**

மாலினி : நாங்கள் மக்கள் தொலைக்காட்சியில் 'மனமே மனமே 'என்ற நிகழ்ச்சியை தொடர்ந்து இரண்டு வருடங்கள் நடத்தினோம். அது தவிர தொடர்ச்சியாக எங்களது யூரியூப் தளத்தில் மனநலம் தொடர்பாக 300க்கும் மேற்பட்ட காணொளிகளை வலையேற்றியிருக்கிறோம். கோவிட் தொற்றுக் காலத்தில் தொடர்ச்சியாக 48 நாட்கள் பிரார்த்தனைக்கூட்டங்கள் நடத்தியிருந்தோம். இக்கட்டான காலகட்டத்தை எவ்வாறு எதிர்கொள்வதென்று நேர்மறையான சிந்தனைகளுக்கு வழிகாட்டக்கூடியதாக அவைகள் அமைந்தன. இதனால் நிறைய பேர் பயன்பெற்றனர் .நிறையப் பேருக்கு மனநலப் பிரச்சினைகளிலிருந்து வெளிவர மிகவும் உதவிகரமாக இருந்திருக்கிறத்இருக்கிறது.

**எதிரொலி : சிட்னியின் ஓர் பகுதியை தமிழீழம் என்று பெயர் சூட்ட முயற்சி எடுத்தீர்கள் அல்லவா - அந்த முயற்சி என்னவாயிற்று?**

மாலினி : மக்களின் ஒருமித்த குரலாக தமிழீழப் பகுதி அமைய வேண்டுமென்றால் ,நாங்கள் அந்த முயற்சியை நிகழ்த்திக்காட்ட எப்போதும் தயாராகவே இருக்கிறோம். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறுவதென்பது மக்களின் கைகளில் தான் இருக்கிறது. இல்லை அவ்வாறான முயற்சி கடந்தகால துயரங்களையும் , சங்கடங்களையும் மறுபடியும் நினைவிற்கு கொண்டு வருமென்று மக்களின் முடிவாக இருக்குமென்றால் நாம் அவர்களின் விருப்பத்திற்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். மக்களின் குரலே எங்கள் விருப்பம். லிட்டில் இந்தியா போன்ற பகுதிகள் உருவாகும்போது ஏன் தமிழீழம் உருவாகக் கூடாது? லிட்டில் இந்தியா உருவாகும் போது ஒரு இந்தியனாக எனக்கு மகிழ்ச்சி... ஆனால் அது போதுமா. என் பசியாறிவிட்டு என் சகோதரன் பட்டினியாகக் கிடப்பது நியாயமா? அது தொடர்பாக எடுத்த முன்னேற்பாடு தான் சிட்னியில் தமிழீழம் என்ற பகுதியை ஏற்படுத்துவது. அது எவ்வளவு தூரம் சாத்தியாகுமென்பது மக்களின் கைகளில் தான் இருக்கிறது .

**எதிரொலி : அது தொடர்பான முயற்சிகளில் தடங்கல்கள் ஏதும் ஏற்பட்டதா? யாராவது முட்டுக்கட்டை ஏற்படுத்தினார்களா ?**

மாலினி : தடங்கல்கள் இருந்தன என்று சொல்ல முடியாது. எல்லா விஷயங்களையும் வேண்டுமென்று பார்ப்பவர்கள் எப்பொழுதும் ஆக வேண்டிய நேர்மறையான காரியங்களை மட்டும் பேசுவார்கள். வேண்டாமென்று நினைப்பவர்கள் அது தொடர்பான எதிர்மறையாக மட்டுமே பேசுவார்கள். மனிதன் என்பவன் ஒரு அபிப்ராய பிராணி. தங்கள் அபிப்ராயங்களை கொண்டே எல்லா வாதங்களையும் அடுக்குவார்கள். மக்களுக்காக நல்லது செய்யவேண்டும் என்று நினைக்கும் நாம் எப்பொழுதும் நடுநிலையை சமரசப் பார்வையுடன் இருக்கவேண்டும். பெரும்பாலான மக்களின் விருப்பமாக எப்போதும் இது அமையுமோ அது வரைக்கும் காத்திருக்க நான் தயாராகவே இருக்கிறேன்.

**எதிரொலி : வேண்டுமென்று நினைப்பவர்களை விட வேண்டாமென்று நினைப்பவர்கள் அதிகமா ?**


(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துக்கள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# இன்னும் இரு தலைமுறைகளுக்குப் பின் தமிழ்மொழி அழியும் அபாயம்!

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலினி : அதிகம் ,குறைவு என்பது பற்றி நான் பேசவில்லை. நான் மக்களை அறிந்துகொள்ளவே ஆசைப்படுகிறேன் வேண்டுமென்று நினைப்பவர்களும்,வேண்டாமென்று நினைப்பவர்களும் அதற்குண்டான காரண காரியங்களை எங்களுடன் தெரியப் படுத்தலாம். அதை அறிந்துகொள்வதற்கு நாங்கள் என்றும் தயாராகவே இருக்கிறோம். காலம் கனிந்து வரும்போது இந்த முயற்சியை முன்னெடுக்க நாங்க தயார். எங்கள் சகோதரர்களின் மனநிம்மதிக்காக பிரயத்தனப்பட எங்கள் அமைப்பு என்றும் தயார்நிலையிலேயே இருக்கிறது.

**எதிரொலி : எழுத்தாளர் ,பேச்சாளர் ,கவிஞர்,பாடலாசிரியர் ,இசையமைப்பாளர், இயக்குநர் ,கல்வியாளர் என்று பல்வேறு ஆளுமைகள் உங்களுக்கு. மகளிர் தின சிறப்பிதழுக்கு பேட்டி காண வேண்டும் என்பது உங்கள் பல்வேறு ஆளுமைகளை வியந்து பார்த்த பிறகு தான் தோன்றியது. இத்தகைய பல்துறை ஆளுமை எவ்வாறு சாத்தியம் ?**

மாலினி : இது கடவுளின் கருணையென்றே சொல்வேன். என்னுடைய ஞானம், அறிவு என்றெல்லாம் சொல்ல மாட்டேன். இதுவரை 100 புத்தகங்கள் எழுதியிருக்கிறேன் . இந்திய நாட்டின் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் ஐயாவின் பாராட்டு கிடைத்தது .இதற்கு பின்னே கடவுளின் அருள் அன்றி வேறு என்ன இருக்க முடியும். மனிதன் நினைத்து மனிதன் உருவாக்கும் விஷயங்கள் கிடையாது. இதெல்லாம் கடவுளின் கொடை . நான் ஒரு கர்மயோகி . ஞானயோகம் தானாகவே கர்மயோகிகளுக்கு கண்டிப்பாக கிடைக்கும் . இலக்கிய உலகில் எனக்கு பிறகு எனது மகள் என்று அவ்வை நடராஜன் ஐயா தனது புத்தகத்தில் எழுதியிருந்தார். இதை விட எனக்கு வேறு என்ன பேறு வேண்டும்.

**எதிரொலி : நீங்கள் படித்தது இயற்பியல் துறை அல்லவா. அந்தத் துறையிலிருந்து எவ்வாறு தமிழுக்கு வந்து சேர்ந்தீர்கள் ?**

மாலினி : எனக்கு படிப்பது மிகவும் பிடித்தமான விஷயம். நான் இயற்பியல் முடித்த பிறகு இதழியல் படித்தேன். எனது ஆராய்ச்சி, நெறிநூல்கள் பற்றி அமைந்தது. இங்கு வந்த பிறகு மனநலம் தொடர்பாக படித்தேன். எல்லாத் துறைகளிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. எந்த துறையிலும் திளைக்கவேண்டும் என்பது எனது விருப்பம்.

**எதிரொலி : நீங்கள் பேசும்பொழுது படிப்பை குதூகலமாக்கி விட்டால் போதும். வேறு எதுவும் தேவையில்லையென்று சொல்கிறீர்கள். அது எவ்வாறு சாத்தியம் என்று சொல்ல முடியுமா ?**

மாலினி : அது ரொம்ப சுலபம் . குதூகலம் என்பதை உடல் ரீதியான, மன ரீதியான மற்றும் மின்னணு அல்லது மற்ற கருவிகளாக வருவது என்று பிரித்து வைத்திருக்கிறோம். அறிவாளிகளின் கல்வித்திட்டத்திற்குள் மாணவர்களைத் தள்ளக்கூடாது. மாணவர்களின் குதூகல மனநிலைக்கு ஏற்றவாறு கல்வித்திட்டங்களை வகுக்கவேண்டும். குழந்தைகளுக்கு என்னவெல்லாம் பிடிக்கும் என்பதை தெரிந்துகொண்டு, சாப்பிட என்ன பிடிக்கும், விளையாட என்ன பிடிக்கும், மின்னணுக் கருவிகள் என்னவெல்லாம் பிடிக்கும் என்பதை அறிந்து அதற்குள் மாணவர்களின் கல்வியை கொண்டு வருவதை நாங்கள் வெற்றிகரமாக செய்திருக்கிறோம். அதுமட்டுமின்றி 54 நாடுகளைச் சேர்ந்த கல்வியாளர்களுக்கும் சொல்லி கொடுத்திருக்கிறோம். குழந்தைகளை குதூகலத்துடன் சொல்லிக்கொடுத்து அவர்களை மேம்பட்ட நிலைக்கு கொண்டுவந்துவிடுவோம். அதாவது 5 ஆவது வகுப்பு நிலையில் இருக்கும் குழந்தைக்கு 2 ஆவது வகுப்பு பாடங்கள் சுலபம் இல்லையா. அந்த மனநிலைக்கு கொண்டுவருவதை தான் எங்கள் தமிழ்வழிக்கல்வி பாடசாலைகள் செய்துகாட்டியிருக்கின்றன . அந்த மனநிலைக்கு குழந்தைகள் கொண்டுவருவதற்கு சிறிது காலம் பிடிக்கும். அதுவரை பெற்றோர்கள் காத்திருக்க வேண்டும். பெற்றோர்கள் மிகவும் பலகீன மனநிலையில் இருந்தால் மிக சிரமம் .

**எதிரொலி : பலவீனமான பெற்றோர்களே குழந்தைகளின் எதிர்காலத்தை சிதைக்கின்றனர். புலம்பெயர்ந்த பெற்றோர் இந்த நாட்டில் எந்த முடிவெடுப்பதும் கொஞ்சம் சிரமம் தானே.அவர்கள்கூட அவர்களின் பெற்றோரின் வழிவந்தவர்கள் தானே ?**

மாலினி : அப்படிச் சொல்ல முடியாது. நமது தாத்தா பாட்டி காலத்தில் குழந்தைகளை ஆசிரியர்களிடம் நம்பி ஒப்படைத்து விட்டு சென்றுவிடுவார்கள். நமது அப்பாக்கள் காலத்திலும் அப்படிதான். ஆனால் இப்போதுள்ள பெற்றோர்களுக்கு அந்த மனநிலை கிடையாது . ஆசிரியர்கள் மேல் நம்பிக்கை கிடையாது. அதுமட்டுமல்லாமல் போட்டி மனப்பான்மை நிறையவே இருக்கிறது.

**எதிரொலி : இந்த மனநிலைக்கு என்ன காரணமென்று நினைக்கிறீர்கள்?**

மாலினி : தனக்கு எல்லாம் தெரியும் என்ற மனப்பான்மை. துறை சார்ந்த வல்லுநர்களை விட தங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற மனநிலை தான் காரணம். அதாவது ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்க அனுப்பும்போது அவர்களை நம்பி அனுப்ப வேண்டும். குறைந்த காலத்தில் பல விடயங்களை செய்யவேண்டும் என்று நினைக்கிறார்கள். தங்கள் பணம் செலவு செய்யும் போது குழந்தைக்கு எது தேவையோ அதில் செலவழிக்காமல் மற்றவர்கள் ஆடம்பரமாக பார்ப்பதற்குண்டான காரியங்களுக்கு மட்டுமே செலவு செய்கின்றனர்.

**எதிரொலி : நீங்கள் பேசும்போது குழந்தைகளுக்கு என்ன தேவையோ அதில் செலவழிக்காமல் சமூகத்தில் மற்றவர்கள் பார்க்கவேண்டுமேயென்று செலவழிக்கிறார்கள் என்று சொன்னீர்கள். குழந்தைகளுக்கு எது தேவை மற்றும் தேவையில்லையென்று எல்லா பெற்றோர்களுக்கும் அந்த புரிதல் இல்லையா. ஒரு பெற்றோராக எனக்கும் தெரியாது. ஒவ்வொரு வகுப்புகளுக்கும் அனுப்பிவைத்து அவர்களுக்கு என்ன பிடிக்குமென்பதை அறிந்துகொள்ள முடியும் இல்லையா ?**

மாலினி : அது சரிதான் . எந்த ஒரு பாடத்திட்டமோ, செயல்முறை பயிற்சியோ முழுமையாக கற்கவேண்டும் இல்லையா. அதைவிட்டுவிட்டு நாங்கள் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் அனுப்புகிறோம் என்று சொன்னால் எப்படி குழந்தைகள் கற்றுக்கொள்ளமுடியும். எங்களிடம் அவ்வாறு கேட்கும் பெற்றோரிடம் தயவு செய்து நீங்கள் அனுப்பவேண்டும் என்று சொல்லிவிடுவோம். ஒரு பாடத்திட்டத்தை உங்கள் குழந்தை முழுமையாக கற்றுக்கொள்ள உங்களுக்கு மனநிலை இல்லையென்றால் ,நீங்கள் உங்களது குழந்தைகளை மட்டுமல்ல வகுப்பிலுள்ள மற்ற குழந்தைகளின் மனநிலையையும் பாதிக்கிறீர்கள் . ஆதலால் உங்களுக்கு எப்போது முழுமையான தெளிவு வருகிறதோ அப்போது உங்கள் குழந்தைகளை அனுப்பிவைத்தால் போதுமென்று சொல்லிவிடுவோம். எங்களுக்கு தரம் தான் முக்கியம் .எண்ணிக்கையல்ல .

**எதிரொலி : அதற்கு பெற்றோர்களை மட்டும் எப்படி குறை சொல்லமுடியும். ஒரு புலம்பெயர்ந்த பெற்றோராக இருக்கும்போது அவர்கள் மற்றவர்கள் என்ன பரிந்துரைக்கிறார்களோ அதைத்தான் அவர்கள் செய்ய முடியுமில்லையா ?**

மாலினி : அது ஒரு மனநிலைப் பிரச்சினை.பெற்றோர்கள் திடமாக இல்லாமல் முடிவெடுக்கும்போது அது குழந்தைகளைப் பாதிக்கிறது. அதற்காகவே பெற்றோர்கள் திடமான மனநிலைக்கு வரும்வரை நாங்கள் காத்திருக்கிறோம். இதே பெற்றோர்கள் இங்குள்ள ஆஸ்திரேலிய கல்வி நிறுவனங்களில் தங்களது குழந்தைகளைச் சேர்க்கும்போது அமைதியாக அங்குள்ள விதிகளைக் கடைப்பிடிக்கிறார்கள் தானே. இங்குள்ள விதிகளை ஒரு தமிழ்ச் சமூகம் சார்ந்த கல்வி நிறுவனத்திலும் நீங்கள் ஏன் கடைபிடிக்க கூடாது ?

**எதிரொலி : நாம் என்ன செய்வது . மற்றவர்கள் என்ன செய்கிறார்களோ அதைத்தான் நாமும் செய்வோம். வரிசையில் நிற்காவிட்டால் நமக்கு கிடைக்காமல் போய்விடும் என்ற தவிப்பு தான் காரணம் . அது மட்டுமல்லாமல் இப்போது யாரையும் நம்புவது கிடையாது . தன்னளவில் குறுகிக்கொண்டுவிடுகிறார்களே ?**

மாலினி : ஆமாம். அது சமூகம் என்ன செய்கிறதோ அதைத்தானே நாமும் செய்ய முடியும். மந்தையில் இருந்து பிரிந்து செல்வது கடினம் தான் . சமூகத்தை நோக்கித் தானே போகவேண்டியிருக்கிறது . தவறிப்போனவர்களும் மந்தையிலிருந்து வெளியில் வந்தவர்களே. மறுமலர்ச்சி ஏற்படுவதும் மந்தையிலிருந்து வெளியில் வந்தவர்களால் தான்.

**எதிரொலி : தொடர்ச்சியாக சமூகம் சார்ந்த பல செயல்களைச் செய்துவருகிறீர்கள். இங்குள்ள புலம்பெயர்ந்த சமூகத்தில் அதற்கான வரவேற்பு மற்றும் ஆதரவு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் இருக்கின்றதா ?**

மாலினி : ஜனங்களின் ரசனைக்கு ஏற்ற மாதிரி ஒருவர் திரைப்படம் எடுக்கிறார் என்றால் அவர் நல்ல ரசிகர்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார். ஜனங்களின் நலனுக்காக ஒருவர் திரைப்படம் எடுக்கிறார் என்றால் அவர் மக்களின் வாழ்வியல் நலனுக்காக போராடிக்கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். அவ்வாறான திரைப்படம் ரசிக மனப்பான்மையுள்ள பார்வையாளனுக்குப் புரியுமா? பல நேரங்களில் சமூக மறுமலர்ச்சிக்காக போராடிக்கொண்டிருப்பவர்கள் மக்களுக்கு என்ன பிடிக்குமோ அதைத் தரமாட்டார்கள் என்ன தேவையோ அதற்காக போராடிக்கொண்டிருப்பார்கள். ராஜாராம்மோகன்ராய் செய்யும்பொழுது ஒட்டுமொத்த சமூகமே எதிர்த்தது இல்லையா .ஆனால் அவரால் மட்டுமே சமூக மாற்றத்தை கொண்டுவரமுடிந்தது . வரவேற்பு என்றுமே ஒரு சமூக மாற்றத்தை முதலில் நிர்ணயிப்பதில்லை. அதனதன் காலகட்டத்தில் அதற்கான மாற்றம் கண்டிப்பாக நடந்தே தீரும் . வரவேற்பு கொண்டு ஒரு விஷயத்தை தீர்மானிப்பவன் வியாபாரி. சமூகநல ஆர்வலர்கள் என்றுமே மக்களின் மறுமலர்ச்சிக்காக மட்டுமே உழைப்பவர்கள். நிறைய மூத்தோர்கள் எங்கள் பின்னால் இருக்கிறார்கள். எங்களுடன் பயணம் செய்ய ஆயிரக்கணக்கானோர் தயாராகவே இருக்கின்றனர் . சிட்னி நகரில் வரவேற்பு இல்லாமல் இத்தனை தொண்டு ஊழியர்கள் எங்களுடன் பணியாற்றியிருக்க முடியாது. போட்டியாக நினைக்கும் சக அமைப்புகள் வரவேற்க மாட்டார்கள் .மிகவும் பயப்படுவார்கள். தமிழின் மீது ஆர்வமுள்ளவர்கள் கண்டிப்பாக வரவேற்பார்கள். 'எனக்கு தமிழ்ப் பாடசாலை மீது தான் பற்று. தமிழ் மீது கிடையாது 'என்பவர்கள் கண்டிப்பாக வரவேற்க மாட்டார்கள்

**எதிரொலி : ஆஸ்திரேலியாவில் உள்ள மற்ற தமிழ் மன்றங்கள் உங்கள் அமைப்பை எவ்வாறு பார்க்கின்றன ?**

மாலினி : கடந்த பத்து வருடங்களாக ஆஸ்திரேலிய மூத்தோர் சங்கத்தின் ஆதரவு எங்களுக்கு என்றும் இருக்கிறது. சிட்னி தமிழ் மன்ற அழைப்பின் பேரில் 24 மணி நேர தமிழ் கல்வி வகுப்புகள் நடத்தியிருக்கிறோம். அது போன்று TACA அமைப்பிற்கு தொடர்ந்து 3 வருட காலம் இலவசமாகவே கண்காட்சியை நடத்தியிருக்கிறோம் . எங்கள் 'அன்னை மொழி அன்பு வழி' அமைப்பு என்றும் தமிழுக்காகவே தொண்டு செய்ய வேண்டுமென்பது குறிக்கோள் . இதையெல்லாம் எந்த அளவிற்கு வரவேற்கிறார்கள், பயன்படுத்திய பிறகு அங்கீகரிக்கிறார்கள் என்பதெல்லாம் அவர்களின் பிரச்சினை. சிட்னி தமிழ் அறிவகத்திற்கு நூற்றுக்கணக்கான புத்தகங்களை சொந்த செலவில் வாங்கி அளித்திருக்கிறோம். எங்களது செயல்பாடுகளெல்லாம் வெறும் ஆவணமாகவே அவர்களிடம் இருக்கிறது. வெளியில் சொல்ல எல்லா அமைப்புகளும் பயப்படுகின்றன . எங்கள் அமைப்பின் வளர்ச்சியை தனி மனிதனின் வளர்ச்சியாக எண்ணும் ஒரு அச்சம் அவர்களிடையே இருக்கிறது.

**எதிரொலி : இந்தக் குறுகிய மனப்பான்மைக்கு என்ன காரணமென்று நினைக்கிறீர்கள்?**

மாலினி : எங்களது பயணம் இலக்கை நோக்கிய பயணம். சும்மா திருவிழாக்கள் நடத்தியெல்லாம் தமிழை வளர்க்க முடியாது. நாம் தீவிரமாக இயங்க வேண்டிய நேரம் .இன்னும் 20 மற்றும் 40 வருடங்கள் கழித்து என்ன நடக்க போகிறது இங்கே ? தமிழ்க்கல்வி நம் குழந்தைகளுக்குச் செல்லவில்லையென்றால் இந்த அமைப்புகள் எப்படி இருக்க முடியும் ? .இது ஒரு மிகத் தீவிரமான பிரச்சினை. நாம் வண்ண வண்ண அலங்காரங்கள் செய்து நம்மை தோரணமாகக் காட்டுவதில் என்ன இருக்கிறது?. முதலில் நாம் அணுக வேண்டிய பிரச்சினை தமிழ்க்கல்வி. இது இங்குள்ள பிரச்சினை அல்ல. உலகம் முழுவதிலுமுள்ள புலம்பெயர்ந்த நாடுகளில் வெறும் 1 சதவிகிதத்திற்கும் குறைவான மாணவர்களே தமிழ் படிக்கின்றனர். தமிழ் உலகம் முழுவதும் பரவியிருக்கிறது என்று தம்பட்டம் அடிக்கிறோம்.இன்னும் இரண்டு தலைமுறை கழித்து காணாமல் போய்விடும் . நாம் முறையாக தமிழ்க்கல்வி அளிக்கவில்லையென்றால். ஒரு நோயாளி நான் நன்றாக இருக்கிறேன் என்று தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டால், முடிவு மரணம் தான். அடுத்த தலைமுறை இதைச் செய்ய முடியுமா? நான் இந்த உண்மையைச் சொல்லும்போது எல்லாருக்கும் சங்கடம் ஏற்படுகிறது .ஆனால் உண்மையை யாரவது ஒருவர் சொல்லவேண்டுமில்லையா . விதிவிலக்குகள் உதாரணம் இல்லை. பத்துக்குழந்தைகள் மேடையில் தமிழ் பேசிவிட்டால் போதுமா. தமிழே தெரியாமல் 1000 குழந்தைகள் இருப்பதை உணர்ந்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாமா?. தமிழ் என்று சொல்லி நாடகம் நடத்திவிட்டு முடித்துவிடுவது கிடையாது .நாம் வீண்பெருமை பேசி மொழியை கொண்டு செல்லமுடியாது .உழைக்கவேண்டும். உண்மையைப் பேசாமல் ,மௌனமாக இருந்து தமிழ்த்தாயை இல்லாமல் செய்வது எங்களால் முடியாது. மனிதத்திற்கும், தமிழுக்கும் உண்மையாகவே இருக்கவேண்டும் என்பது தான் எங்கள் விருப்பம் . மேடையில் பாராட்டு வாங்குவது அல்ல. இதை நான் குறையாகச் சொல்லவில்லை .மிகவும் வருத்தத்துடன் சொல்கிறேன். நீங்கள் எதுவும் செய்யவில்லையென்றாலும் பரவாயில்லை . செய்கிறவர்களையாவது பணியாற்ற விடுங்கள் , அதுபோதும். எங்கள் பின்னே மூத்தோர்களும், ஆயிரக்கணக்கான சாமான்யர்களும் இருக்கிறார்கள். ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை.

# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

ஆர்.சுகந்தன்

# ராஜீவ் போட்ட ஒப்பந்தம்; சேடமிழுக்கிறது இப்போது!

இலங்கையில் நிலவிய ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்து, அரசியல் தீர்வைகாணும் நோக்கிலேயே இந்தியாவின் தலையீட்டுடன் "அதிகாரப்பகிர்வு" கோட்பாடு சகிதம் மாகாணசபை முறைமை இற்றைக்கு 3 சதாப்தங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புகள் வலுத்தன. ஜே.வி.பி.யினர் தீவிரமாகச் செயற்பட்டனர். அந்தக்கட்சியின் செயற்பாட்டாளர்கள் பலர் உயிர்த்தியாகமும் செய்தனர். மறுபுறத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இருந்த சுதந்திரக் கட்சியும் போர்க்கொடி தூக்கியது.

இவ்வாறு கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் 1987 ஆம் ஆண்டு ஜூலை 29 ஆம் திகதி இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கையின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், இந்தியாவின் சார்பில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும் கையெழுத்திட்டனர்.


ஜே.ஆர். ஆட்சியில் பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாச இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது. மறுபுறத்தில் விடுதலைப் புலிகளும் அந்த தீர்வுப் பொறிமுறையை முழுமையாக ஏற்கவில்லை.

எனினும், 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொண்டு, திட்டங்களை செயற்படுத்துவதற்காக 13 ஆவது திருத்தச்சட்டம் அவசர சட்டமூலமாக கொண்டுவரப்பட்டது. இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கும் தொடுக்கப்பட்டிருந்தது. இறுதியில் திருத்தங்கள் சகிதம் 1987 நவம்பர் 14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. 1987 இன் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டமும் அங்கீகரிக்கப்பட்டது.

இதன்படி இலங்கை 9 மாகாணங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு மாகாணசபை நிறுவப்பட்டது. ஒன்பது மாகாணங்கள் காணப்பட்டபோதிலும் எட்டு மாகாண சபைகளே நிறுவப்பட்டிருந்தன. வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களும் 1988 செப்ரெம்பர் 8 ஆம் திகதி அவசரகாலச் சட்டத்தின்கீழ் இணைகக்கப்பட்டு தனியானதொரு மாகாணசபை நிறுவப்பட்டது. எனினும், 1990 இல் வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற தீர்ப்பு ஊடாக வடக்கு, கிழக்கு இணைப்பு துண்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கு இந்த 13 ஆவது திருத்தச்சட்டமும் ஒரு காரணமாக இருந்தது எனக் கூறப்படுகின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்குடன் தொடர்புடையவர்களுக்கு உரிய தண்டனை வழங்கி, அவர்களை மறைமுகமாக பழிதீர்க்கும் வகையில் செயற்பட்ட இந்தியா, தமது குழந்தையான 13 ஆவது திருத்தச்சட்டம் இலங்கையில் பரிதவிக்கும்போது கண்டும் காணாமல் இருப்பது ஈழத் தமிழர்கள் விடயத்தில் டில்லி எவ்வாறான அணுகுமுறையைக் கையாள்கின்றது என்பதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.



இந்தியா நினைத்திருந்தால் திலீபனின் இழப்பைக்கூட தடுத்திருக்கலாம் என்ற ஆதங்கம் தமிழர்கள் மத்தியில் இன்னமும் உள்ளது. இதற்கிடையில் சாந்தன் நீதிமன்றம் ஊடாக விடுவிக்கப்பட்டும் சுமார் ஒன்றரை வருடம் அவருக்கு பாரத தேசத்திலேயே தங்கவேண்டி ஏற்பட்டதும், கடைசியில் அவரின் சடலமே இலங்கை வந்ததும் டில்லி மீதான தமிழர்களின் ஆதங்கத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. யாழ். பல்கலை மாணவர்கள் ஒன்றியம் விடுத்திருந்த அறிக்கை இதற்கு சான்றாகும்.

இந்தியாதான் தெற்காசியாவின் காவலன். பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்துவரும் நாடு. எனினும், அந்நாட்டின் தலையீட்டுடன் அறிமுகப்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை 30 வருடங்களுக்கு மேல் கடந்தும் கொழும்பு அரசு இன்னும் முழுமையாக அமுல்படுத்தவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். ஏன் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதிகளே இல்லை. தேர்தல்கூட நடத்தப்படாமல் உள்ளது. இது தொடர்பிலும் டில்லி 'கப்சிப்'. ஏதோ சமாளிப்புக்காக மாகாணத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டாலும் உரிய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதில்லை.

மறுபுறத்தில் '13' ஐ பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகளும் தென்னிலங்கை அரசால் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதாவது பொலிஸ் அதிகாரம் இன்னும் அமுல்படுத்தப்படாதபோதிலும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து '13' ஐ நீக்குவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான நகர்வாகவே நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் தனிநபர் சட்டமூலம் காணப்படுகின்றது.

## பொலிஸ் அதிகாரத்துக்கு சாவு மணி

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டம் என பெயரிடப்பட்டுள்ள குறித்த சட்டமூலம் பெப்ரவரி 13 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பெப்ரவரி 20 ஆம் திகதி ஆரம்பமாகும் நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது இந்தச்சட்டமூலம் சபையில் முன்வைக்கப்பட்டது.

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் பொலிஸ் அதிகாரம் பயங்கரமானது. எனவே, மாகாண சபை முறைமையில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை நீக்குவது தேசியவாதிகளின் 37 வருடகால கனவாக இருந்து வருகின்றது. அந்தக் கனவை நனவாக்கும் வகையில் மாகாண சபை முறைமையில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கான அரசமைப்பின் 22 ஆவது திருத்தச்சட்டமூலத்தை எம்மால் முன்வைக்க முடிந்தது." - என கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

" இச்சட்டமூலம் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் உயர்நீதிமன்றத்தில் அதனை சவாலுக்குட்படுத்த முடியும். தமிழ்ப் பிரிவினைவாதிகள் இதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்லக்கூடும்." எனவும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டி இருந்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைக்கப்பெற்ற பின்னர், அதன்பிரகாரம் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும், அதற்கான பெரும்பான்மையும் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார்.

## எதற்காக இந்த ஏற்பாடு?

எதற்காக இந்த சட்டமூலம் கொண்டுவரப்படுகின்றது என்பது பற்றியும் உதய கம்மன்பில விவரித்துள்ளார்.

" மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். போர்காலத்தில் புலிகளுக்கு சில நாடுகள் நிதி அனுசரணை வழங்கின. ஆயுதங்களை வழங்கின. பயிற்சியளித்தன. ஆனால் இவை அனைத்து திருட்டுத்தனமாகவே இடம்பெற்றன. ஆனால் எமக்கு வெளிப்படையாக ஆதரவு கிடைத்தது. ஏனெனில் எமது பக்கம் இருந்தது உத்தியோகபூர்வ படை. புலிகள் என்பது பயங்கரவாத அமைப்பாகும்.

எதிர்காலத்தில் பிரிவினைவாத போர் ஏற்படும்பட்சத்தில் அது வடக்கு மாகாணத்தின் பொலிஸாருக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான போராகவே இருக்கும். இரண்டுமே உத்தியோகபூர்வ படைகள். ஆக இலங்கைக்கு எதிரான நாடுகள், எவ்வித தடையும் இன்றி வெளிப்படையாக வடக்கு பொலிஸ் படைக்கு உதவி வழங்கலாம்.

ஒரு பிராந்தியம் குடியரசுக்கு எதிராக செயற்படுகின்றதெனில் மத்திய அரசு தலையிடுவதற்கான அதிகாரம் இந்திய அரசமைப்பில் உள்ளது. ஆனால் இந்திய அரசமைப்பை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தில் இந்திய அரசமைப்பில் மத்திய அரசு தலையிடுவதற்குரிய அதிகாரம், இதில் உள்ளடக்கப்படவில்லை. இதனால் பொலிஸ் அதிகாரம் ஊடாக பிரிவினைவாதிகள் பலமடையக்கூடும்.

மத்திய அரசின் பொலிஸார் அதிகாரி ஒருவர், மாகாணசபை அதிகார எல்லையில் கடமையாற்றும்போது சீருடையில் இருக்க முடியாது. அதேபோல மாகாணத்தின் பிரதி பொலிஸ்மா அதிபரின் கட்டளைகளை ஏற்க வேண்டும்.

மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் முதல்வருக்கு பொறுப்பு கூறவேண்டும். மாகாண பொலிஸ் ஆணைக்குழுவில் உள்ள மூவரில் இருவர் முதல்வரின் நியமனம். எனவே, பொலிஸ் அரசியல்மயமாக்கப்படக்கூடும். எனவேதான் நல்லாட்சி மற்றும் தேசிய பாதுகாப்பு துறைகளில் இந்த 22 ஆவது திருத்தச்சட்டமூலம் முக்கியத்துவம் பெறுகின்றது." - எனவும் கம்மன்பில வியாக்கியானம் வழங்கியுள்ளார்.

இச்சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் அவசியம். தமிழ்ப் பிரிவினைவாதிகள் மட்டுமே பொலிஸ் அதிகாரம் கோருகின்றனர். எனவே, இச்சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் எனவும் உதய கம்மன்பில உறுதியாக கூறியுள்ளார்.

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு பொறிமுறையாக மாகாணசபை முறைமை உள்ளது. அதனை மேலும் பலப்படுத்தி, சமஷ்டி அடிப்படையிலான அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை தமிழ் மக்கள் கோரி வருகின்றனர். இந்நிலையில் '13'ஐ பலப்படுத்தாமல் அதனை பலவீனப்படுத்துவதற்கு முயற்சி இடம்பெறுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமெனில் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்கான வழியை தேடாமல் '13' இல் உள்ள அதிகாரங்களை பறிக்க முற்படுவது பாதக விளைவுகளையே ஏற்படுத்தும்.





# போதை எனும் பேரழிவு: தி.மு.க. புள்ளியும் தனியார் துறைமுகங்களும்

● பா.ரகுநாதன்

டெல்லியில் உள்ள மத்திய போதைப் பொருள்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்குடெல்லியின் கைலாஷ் பார்க் பகுதியில் உள்ள குடோனில் போதைப்பொருட்கள் தயாரிக்கப் பயன்படும் ரூ.2 ஆயிரம் கோடி மதிப்புள்ள 50 கிலோ இரசாயனப் பொருட்களைப் பறிமுதல் செய்தனர்.

தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் இந்தப் போதைப்பொருட்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். இப்பொழுது பிடிக்கப்பட்ட 2000 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்கள் தயாரிப்பின் மூளையாகச் செயல்பட்டது தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளரும், தி.மு.க.வின் சென்னை மேற்கு மாவட்ட செயலாளராகவும், அயலக அணித் துணை அமைப்பாளராகவும் பல்வேறு பொறுப்புகளை வகித்து வரும் ஜாபர் சாதிக் என்பது தெரியவந்துள்ளது. அவரை விசாரிக்க அதிகாரிகள் முயன்றனர், ஆனால் விபரம் அறிந்த அவர் தலைமறைவானார். அவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதைத் தடுக்க, அனைத்து விமான நிலையங்களுக்கும் 'லுக்-அவுட்' நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அவரது வங்கிக் கணக்குகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்படும் போதைப் பொருட்களை மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் அடிக்கடி பறிமுதல் செய்து வரும் செய்திகளை அவ்வப்போது செய்திகளில் காண்கிறோம். உலகம் முழுவதிலும் போதைப்பொருட்களின் புழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதில் மூன்றாம் உலக நாடுகள், வளர்ந்த நாடுகள் என்கிற பாகுபாடு இல்லாத அளவிற்கு எல்லைகள் இல்லாமல் போதை, விசம் போல் பரவி வருகிறது.

போதை என்பது மனித குல வரலாறு நெடுகிலும் பல்வேறு வகைகளில் நம்முடன் பயணித்து வந்துள்ளது. மன்னர்கள் தங்கள் நிலத்தில் உள்ள உயர்வான மது வகைகளை விருந்தினருக்கு பரிமாறும் பழக்ம் இருந்தது. மன்னர்கள் முதல் சாமானியக் குடிகள் வரை மது அருந்து பழக்கம் இருந்துள்ளது என்பதை வரலாற்று நூல்கள் பல நமக்கு உணர்த்துகின்றன. மனிதர்கள் அடிமைகளாகப் பயன்படுத்தப்பட்ட காலத்தில் அவர்களுக்கு மது வகைகளை கொடுப்பதுண்டு. உழைப்பவர்களுக்கு சம்பளமாக பல்வேறு விதமான மது வகைகளைக் கொடுத்ததாகவும் தகவல்கள் உண்டு.

ஒருவன் தன்னிலை மறந்தால், அவனது சொந்த இன்ப துன்பங்கள் அவனை பாதிக்காது. தன்னிலையை இழப்பதில் மனிதனுக்கு இருக்கும் விருப்பத்தை அறிந்து கொண்ட மனிதன் விதவிதமாக போதைப் பொருட்களை கண்டுபிடிக்கவும் தொடங்கினான். ஒரு மக்கள் கூட்டம் தன்னை, தன் நிலையை மறக்க வேண்டும் என்பதை அரசுகள், பேரரசுகள், சாம்ராஜ்ஜியங்கள் முடிவு செய்த போது போதைப் பொருள் தயாரிப்பு என்பது பெரும் தொழிலாக மாறியது.

வசதிபடைத்தவர்கள், விபரம் அறிந்தவர்கள் தங்களின் போதை உட்கொள்ளுதல் அளவினை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பர், ஆனால் மாடாய் உழைத்துக் கிடக்கும் சாமானியர்கள், தங்கள் வாழ்வின் இயலாமைகளை மறப்பதற்கு ஒரு தற்காலிகத் தப்பித்தலாக போதைக்குள் குடியேறுகிறார்கள், அதிலேயே உழன்று கிடக்கும் வகையில் போதைப் பொருட்களின் சந்தையும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் போதைப்பொருள் பறிமுதல் தொடர்பாக மத்திய போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் (என்.சி.பி) ஒரு விரிவான ஆய்வறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளனர். இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் போதைப்பொருள் பறிமுதல் 300% அதிகரித்துள்ளது என்பதை முழுமையான விபரங்களுடன் அது தெரிவிக்கின்றது.

மதுபானம், புகையிலை, அபின், ஹெராயின், கஞ்சா, பான் மசாலா, போதை தரும் இன்ஹேலர்கள் என பல வகையான பொருட்கள் இன்று ஒன்லைனில் கிடைக்கும் வகையில் அந்தச் சந்தை தன்னை விரிவுபடுத்தியுள்ளது. தொழில்நுட்பமும் இதற்கு வெகுவாக பயன்படுகிறது.

இந்தியாவும் இதில் விதிவிலக்கு அல்ல, அங்கே நாடு முழுவதுமே போதை கலாசாரம் வேகமாகப் பரவி வருகிறது. இளையோரைக் குறிவைத்து இன்றைக்கு இந்தச் சந்தை செயல்படுகிறது. இந்தியாவில் போதைப்பொருள் இந்த அளவுக்கு பரவியிருப்பதற்குக் காரணமே, மத்திய அரசு தான் என்கிற ஒரு வாதமும் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில்தான் போதைப் பொருள்கள் அதிகம் விற்பனையாகின்றன. குஜராத்தில் உள்ள துறைமுகங்களை வேகவேகமாக தனியாருக்கு கொடுத்துவிட்டார்கள். இந்தப் போதைப்பொருள்கள் எல்லாம் வெளிநாட்டில் இருந்து வருகின்றன. வெளிநாட்டில் இருந்து தனியார் வசம் உள்ள துறைமுகம் மூலமாகத்தான் இந்த ஒட்டுமொத்த போதைப்பொருட்களும் கடத்தப்படுகின்றன.

அதானியின் முந்த்ரா துறைமுகம்தான் இதில் முதலிடத்தில் இருக்கிறது. அதில்தான் அதிகமாக கடத்தல் நடைபெற்று வருகிறது. குறிப்பாக பல்வேறு நாடுகளில் இருந்து வரும் போதைப்பொருள்கள், ஆப்கானிஸ்தானிலிருந்து வரும் போதைப் பொருட்களைத் தடை செய்ய மத்திய அரசு இன்னும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் போதைப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. பிற நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டுதான் இங்கே கொண்டுவரப்படுகின்றன. தமிழ்நாடு அரசு போதைப் பொருட்களை ஒழிக்க கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் காவல்துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் மாநாடு நடத்தி, ஆலோசனைகள் அளிக்கப்பட்டன. என்ன தான் இப்படி நடவடிக்கைகள் எடுத்தாலும் தி.மு.க.வின் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஜாபர் இந்த போதைப்பொருட்கள் கடத்தலில் ஈடுபட்டமை ஒரு மாபெரும் கிரிமினல் நடவடிக்கையே போதைப் பொருட்களில் இருந்து அபரிமிதமான வருமானம் ஈட்டுபவர்கள், தங்களின் செல்வாக்கைத் தக்கவைக்க அரசியல் கட்சிகளில் இணைந்து தங்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். மும்பை நகரத்தில் இயங்கும் பாலிவுட் சினிமாவில் போதை மாபியாக்களின் முதலீடுகளும், தலையீடுகளும் இருப்பது குறித்து நாம் விரிவாக அறிந்திருந்தாலும், தி.மு.க.வை போன்ற ஒரு கட்சியில் முக்கியமான பதவிகள் வகிக்கும் ஒருவர் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டிருப்பது, அந்தக் கட்சிக்கு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தலைவலியாக மாறலாம், ஆனால் அதை எல்லாம் விட அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களின் கட்சியில் இருப்பவர்களின் வருமானத்தின் வழிமுறைகள் என்ன என்பதை அறிந்துகொண்டு வெளிப்படைத் தன்மையுடன் இருப்பது காலத்தின் அவசியம்.

இந்த நேரத்தில் இலங்கையின் கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில், சுமார் 1000 பேர் புனர்வாழ்வில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில், அங்கிருந்து 600 பேர் தப்பியோடியுள்ளதாக வந்த செய்தி நினைவில் வந்து செல்கிறது. மூன்றாம் உலக நாடுகள் அனைத்திலும் அதன் இளம் குடிமக்களை போதையில் அமிழ்த்துவது ஒரு தொடர் நடவடிக்கையாக திட்டமிட்டு செயல்படுத்தபடுகிறது.

ஆண்டுதோறும் ஜூன் 26 ஆம் திகதி உலக போதைப் பொருள் ஒழிப்பு தினமாக கடைபிடித்தால் மட்டும் போதாது. போதைப் பொருள் பாவனை, போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் மீது பாராபட்சமின்றி நடவடிக்கைகள் எடுக்காதவரை, அதிகாரிகள் போதை மாபியாக்களிடமிருந்து கையூட்டு பெறுவதை நிறுத்தாத வரை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வில்லை. ■

# அச்சங்களை எழுப்பும் சட்டமூலங்கள்



சா. ஹரிகரன்

இலங்கையில் அண்மைக்காலமாக புதிய புதிய சட்டமூலங்களின் வரைவையும் அவற்றில் சில சட்டங்களாக நிறைவேற்றப்பட்ட தன்மையையும் காணமுடிகின்றது. அவசரத்தனமாக, மனித உரிமை சார் பொறிமுறைகளுக்கு விரோதமான சில சட்டங்கள் நிறைவேற்றப்பட முயற்சிக்கப்படுவதாகவும் தெரிகின்றது.

நாடு அவசரமாக தேர்தல்களை சந்திக்க வேண்டியிருப்பதால் இப்போது ஆட்சியில் இருக்கின்ற தரப்புகளுக்கான ஆதரவுத் தளத்தை உருவாக்க வேண்டுமெனில் மாற்று தரப்புகளின் அல்லது மாற்றுக் கருத்தாளர்களின் வாய்களைப் பூட்ட வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. அதற்காகவே இந்தச்சட்டமூலங்கள் கொண்டு வரப்படுவதாக எதிர்க்கட்சிகள் போர்க் கொடி தூக்கி இருக்கின்றன. இது பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தொடரிலும் பிரஸ்தாபிக்கப்படத் தவறவில்லை. ஐ. நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் உரையாற்றிய ஐ. நா .மனித உரிமைகள் ஆணையாளர் இதுபற்றி பின்வருமாறு தெரிவித்திருந்தார்-

“இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் போது அடிப்படை உரிமை, சுதந்திரம், ஜனநாயகம், சட்டவாட்சி, மக்கள் இறைமை ஆகிய விடயங்கள் மீது நீண்ட காலத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில சட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்படுகின்றமை தொடர்பில் கவலை அடைகின்றோம் அந்த வகையில் நிகழ்நிலைக் காப்பு சட்டம் , பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், , தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம், அரசாங்க நிறுவனங்கள் மீதான கண்காணிப்பு மற்றும் பதிவுச் சட்டமூலம் என்பவை இவற்றுள் உள்ளடங்குகின்றன”

-என்றார்.

இவ்வாறு தொடர் சட்ட உருவாக்கங்கள் சட்ட முன்மொழிவுகள் இலங்கை மக்களிடையே ஒருவித அச்ச உணர்வை ஏற்படுத்த தவறவில்லை. இலங்கையின் அண்மைக்காலச் சட்டமூலங்களில், பயங்கரவாத ஒழிப்பு சம்பந்தமான சட்டமூலம் , நிகழ்நிலைக் காப்பு தொடர்பான சட்டமூலம் ஆகியவற்றில் நிகழ் நிலை காப்பு சட்டமூலம் சட்டமாக அவசரமாக நிறைவேற்றப்பட்ட போதிலும் பயங்கரவாத ஒழிப்பு சட்டமூலத்தில் சில சரத்துக்களை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பு தேவையென உயர் நீதிமன்றம் அண்மையில் மிக முக்கியமான தீர்ப்பொன்றை வழங்கியிருக்கின்றது.

அடிப்படை உரிமைகள் மற்றும் அரசியலமைப்பில் சாதாரண பெரும்பான்மை மூலமோ அல்லது அறுதிப்பெரும்பான்மை மூலமோ திருத்தப்பட முடியாதவை என அரசியலமைப்பு கூறும் விடயங்களோடு குறித்த சட்டமூலத்தின் சில விடயங்கள் முரண்படுவதாலேயே இந்த உத்தரவை உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கின்றது. ஏற்கனவே நிகழ் நிலைக் காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சூழலில் அதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு உட்படுத்திய உயர் நீதிமன்றம், சில ஏற்பாடுகள் திருத்தப்படுமாக இருந்தால் இதனைப் பெரும்பான்மை மூலம் நிறைவேற்றி கொள்ள முடியும் என தீர்ப்பளித்திருந்தது. ஆனால் குறித்த உயர்நீதிமன்றப் பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்படாமல் சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்றிக் கொண்டதோடு, சபாநாயகரின் சான்றுரையும் சட்டத்தின் கீழான நிபந்தனைகளுக்கு முரணாக வழங்கப்பட்டதாகவும் எதிர்க்கட்சிகள் இலங்கை நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாகவே குற்றஞ்சாட்டி வருகின்றன. இந்த சான்றுரைசார் முறைமை சட்டத்துக்கு முரணானது என்று, உயர் நீதிமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ .சுமந்திரன் தாக்கல் செய்த மனுவையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கின்றது. அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் சபாநாயகரின் சான்றுரையொன்றை நீதிமன்றங்களில் சவாலுக்குட்படுத்துதல் தொடர்பிலான மட்டுப்பாடுகள் மற்றும் மனுவின் தன்மை தொடர்பில் சட்டமா அதிபர் முன்வைத்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன்றம் மேற்படி உத்தரவை வழங்கியிருக்கின்றது.

ஆகவே ஒரு சட்டமூலத்தை நிறைவேற்றிய திருப்தியில் அடுத்த சட்டமூலமான பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தையும் நிறைவேற்ற அரசாங்கம் தீவிர முனைப்பு காட்டி வருவதை காணமுடிகின்றது. ஏற்கனவே தற்காலிக ஏற்பாடாக கொண்டு வரப்பட்டு நிரந்தர ஏற்பாடாக மாற்றப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கையில் இன்னமும் நடைமுறையில் இருக்கின்றது. ஆனால் அதனை நீக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தொடர்ச்சியான எதிர்ப்புகளை முன்வைத்து வருகின்ற சூழலில் , அதனை மாற்றுகிறோம் என கூறிக்கொண்டு அரசியலமைப்பின் அடிப்படை ஏற்பாடுகள் என கூறப்படும் அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரைக்கு அப்பால் செல்லக்கூடியவாறான ஒரு சட்டமூலத்தை இலங்கை முன்வைத்திருப்பது இலங்கை பொருளாதார மீட்சியின் பெயரால் ஒரு ஜனநாயக விரோதப் போக்கு நோக்கி பயணிக்கிறதா என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றது.

பொருளாதார மீட்சிக்கு சோசலிச அடிப்படையிலான சீனா, தென்கொரியா போன்ற நாடுகளின் சர்வதிகாரத் தன்மையில் இலங்கை பயணிக்க தொடங்குகிறதா என்ற கேள்வியும் இதன்போது எழுகின்றது. இலங்கை அரசியலமைப்புச் சட்டம் இலங்கையை ஒரு ஜனநாயக நாடாக அடையாளப்படுத்துகின்றது. குறிப்பாக அரசியலமைப்பின் உறுப்புரை இலங்கை தன்னாதிக்கமும் சுதந்திரம் கொண்ட அரசாகும் என்பதோடு அது ஜனநாயக சோசலிசக் குடியரசு என அறியப்படுதலும் வேண்டும் என அடையாளப்படுத்துகின்றது. அத்துடன் இலங்கை அரசியலமைப்பின் அரச கொள்கைத் தத்துவமானது ஜனநாயகத்தைப் போற்றிப் பாதுகாத்தல், பிரஜைகளின் அடிப்படை உரிமைப் பாதுகாப்பு என்பன இலங்கை அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமைகளாக வரையறுக்கப்படுகின்றன. பொருளாதார மீட்சியின் பெயரால் சர்வதிகாரத்தின் திசையில் பயணிக்க முற்படுதல் இலங்கையின் அரசியலமைப்பு முறைமைக்கு முற்றாக விரோதமானது . ஏற்கனவே பொருளாதாரச் சீர்குலைவை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, மத்தியில் அளவுக்கதிகமான அதிகாரத்தை குவித்து நிறைவேற்று அதிகாரத்தை பலப்படுத்திய ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சந்தர்ப்பவாத முறைமை போன்று தற்போதைய ஆட்சியாளர்களும் இத்தகைய சட்டங்களின் மூலமாக ஜனநாயகத்தின் பெயரால் சர்வதிகார அமுல்படுத்தலுக்கு செல்ல முற்படுகிறார்களா? என்ற அச்சத்தை பல அமைப்புகள் சுட்டி காட்டி வருகின்றன. தற்காலிகமானது என சொல்லப்பட்டு ஆறு மாதத்துக்கானது என உத்தரவாதப் படுத்தப்பட்டு அன்றைய சூழலுக்குத் தேவையானது எனவெல்லாம் கூறப்பட்டு நிரந்தர ஏற்பாடாகக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்ட உருவாக்கச் சூழல் போன்று தற்போதய பொருளாதார நெருக்கடி அதன் மூலம் அரசாங்கம் சந்திக்கும் எதிர்ப்பு குரல்களை சாதகமாக பயன்படுத்தி இச்சட்டம் கொண்டு வரப்படுகிறதா என்ற சந்தேகமும் பரவலாக எழுகின்றது.

எந்தச்சந்தர்ப்பதிலும் இலங்கை அரசியலமைப்பின் உறுதிப்பாடும் ஏற்பாடுகளும் பேணப்பட வேண்டும் என்பது அரசாங்கம் கவனமெடுக்க வேண்டிய மிக முக்கியமான அடிப்படையாகும். ஆனால் இந்தச்சட்டமூல முன்மொழிவு அது பற்றிய அடிப்படைச் சூழலை ஏற்படுத்துமா என்ற கேள்வியை பல்வேறு அரசியல் தலைவர்களும் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர்.

அந்தவகையில் தற்போதைய 2023 மார்ச் மாத குறை நிரப்பி சட்டமூலமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாம் தீவிரமாக ஆராய வேண்டியுள்ளது. இந்தச் சட்டமூலம் ஏற்கனவே கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டப் பிரிவுகளுக்கும் அப்பால் செல்வதாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளையும் தீவிரமாக ஆராய வேண்டிய தேவையுள்ளது.

இச்சட்டமூலத்தின் முகவுரை பின்வருமாறு கூறுகின்றது ஸ்ரீ

“பயங்கரவாதச் செயல்களிலிருந்தும், இலங்கையிலுள் அல்லது வெளியில் புரியப்பட்டவையும் பயங்கரவாதத்துடன் இணைந்தவையுமான வேறு தவறுகளில் இருந்தும் பயங்கரவாதம் என்ற குறித்த தவறாக அமைகின்ற குறித்த செயல்களில் இருந்தும் இலங்கையின் பந்தோபஸ்தினையும் இலங்கை மக்களை பாதுகாப்பதற்கும், இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ் செய்வதற்கு இலங்கை மக்களையும் ஆள்புலத்தை பயன்படுத்தலை தடுப்பதற்கும் , பயங்கரவாதத்துடன் இணைந்த செயலொன்றை செய்யும் ஆட்களை கண்டுபிடிப்பதற்கும் அடையாளம் காண்பதற்கும் பற்றுக்கைக்கு உட்படுத்துவதற்கும் தடுத்து வைப்பதற்கும் புலனாய்வு செய்வதற்கும் அவருக்கெதிராக குற்ற வழக்கு தொடுப்பதற்கும் அவரை தண்டிப்பதற்கும் அவற்றோடு தொடர்புபட்ட இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான சட்டமூலமொன்று ’

- என இந்தச்சட்டமூலம் அடையாளப்படுத்துகின்றது. ஆனாலும் இந்த நோக்கத்தை அடைய சட்டமூலத்தின் உள்ளடக்கம், சட்டமூல அமைப்பு , மற்றும் சட்டமாக நிறைவேற்றப்பட்டால் அமுலாக்கப்படும் தன்மை ஆகியவை சாதகமான வழியை ஏற்படுத்துமா என்ற அச்சத்தை அனைவருக்கும் ஏற்படுத்துகின்றது.

இச்சட்டமூலத்தின் பயங்கரவாதம் என்றால் என்னவென்ற வரையறுப்பு மிக மிக விமர்சனத்துக்குள்ளதாகவே அமைகின்றது. மிக நீண்ட விடயங்களையும் செயல்களையும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் கீழ் தவறொன்றாக குற்றமொன்றாக அடையாளப்படுத்துகின்றது.

நீட்டி முழக்கி பல விடயங்களை இது வரையறுப்பதே இங்கு பார்க்க வேண்டிய விடயமாக அமைகின்றது . இந்த வரையறுப்பு ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டப் பிரிவில் சில ஏற்பாடுகளுடன் ஒத்துப் போவதாகவும் சில ஏற்பாடுகளோடு வேறுபடுவதாகவும் ,ஏற்கனவே பயங்கரவாதத் தடுப்பு சட்ட வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளின் கருதுகின்றனர்.

குறிப்பாக இதன் நீண்ட பயங்கரவாத செயல்களுக்குள் அரசாங்கத்துக்கு எதிராகப் புரியப்படுகின்ற விமர்சனங்கள் கருத்துக்களை உள்ளடக்க முடியும் என்பது இந்தச்சட்டமூலம் தொடர்பான விமர்சனமாக அமைகின்றது. மக்களின் கருத்து வெளிப்பாட்டு உரிமை, போராட்டம் நடத்தும் உரிமை என்பவற்றுக்குள் அரசாங்கத்தை விமர்சிக்கின்ற தரப்புகளையும் உள்ளடக்க முடியும் என்பதே இதன் அடிப்படைச் சவாலாக அமைகின்றது. பயங்கரவாதத்தை தெளிவாக வரையறுக்காமல் மிக நீண்ட அடிப்படையில் வரையறுத்தல் என்பது இதற்கான கதவைத் திறந்து விடுகின்றது. குறிப்பாக வெறுப்புணர்வைத் தூண்டுகின்ற பேச்சு என்பதற்குள், தமிழர்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வரும் சுய நிர்ணய உரிமை கோரிக்கையின் அடிப்படையிலான அதிகாரப் பகிர்வையும் உள்ளடக்க முடியுமா என்ற கேள்வியை கடந்த காலங்களில் சில சட்ட மற்றும் மனித உரிமை நிபுணர்கள் எழுப்பியிருந்ததையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

**(16ஆம் பக்கம் பார்க்க)**



# சாந்தன்: விதைக்கப்பட்ட சூரியன்



ஜெரா

சாந்தனின் அம்மா. அனேகமான ஈழத்தாய்மார்களின் பிரதிநிதிதான் அவர். தன் பிள்ளையைப் போருக்கு அனுப்பிவிட்டு, வெள்ளைவானிடம் பறி கொடுத்துவிட்டுக் காத்திருக்கும் பல்லாயிரம் அம்மாக்களின் பிரதிநிதியும் அவர். சம்பந்தமற்ற குற்றத்திற்காகக் கைதான தன் பிள்ளையை இந்திய தேசம் 'இன்று விடுதலைசெய்யும், நாளை விடுதலைசெய்யும் 'என்கிற அங்கலாய்ப்போடு 33 வருடங்களைக் கடந்தார். கடந்த ஒரு வருடமாகத் தன் மகன் வீட்டுக்கு வந்தே விடுவான், தன் கையால் ஒரு பிடி சோறுண்பான் என்பதை ஆழமாக நம்பினார். சாந்தனை இந்தியச் சிறை விடுவித்து, தமிழக அரசிடம் ஒப்படைத்தமைதான் அந்த நம்பிக்கைக்கு முழுமுதற் காரணமும். இனத்தால் இரண்டறமாகிய தமிழகம், தன் மகனுக்கும் தமக்கும் இருக்கின்ற தொப்புள்கொடி பந்தத்தை அறுத்துக்கொள்ளார். தன் மகனின் பக்கம் நின்று, தாயிடம் மீளனுப்பிவைக்க சகல காரியங்களையும் முன்னின்று செய்வார்கள் என்பதில் அசையாத நம்பிக்கைக்கொண்டிருந்தார். ஆனால் தொப்புள்கொடி உறவென வார்த்தைக்கு வார்த்தை அன்பொழுக அரசியல் நடத்தும் தி.மு.க அரசு, சாந்தனை திருச்சி சிறப்பு அகதிகள் முகாம் எனக் குறிப்பிடப்படும் திறந்தவெளி சித்திரவதை முகாமிற்கே அனுப்பியது. அங்கும் கால்நீட்டி அமர முடியாத ஒரு சிறுகூண்டைத்தான் சாந்தன் வசிக்கும் வீடாக வழங்கியது சிறை நிர்வாகம். ஒரு மலக்குழியளவு பரப்புகொண்ட அந்தக் கூண்டுக்குள்தான், சாந்தன் அவர்கள் உணவு சமைக்கவேண்டும். உறங்கவேண்டும். ஓய்வெடுக்க வேண்டும். தன் இன்னபிற அலுவல்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் தன்னை சந்திக்க வந்தோரிடம் சாந்தன் சொன்னார், “இதைவிட சிறையே மேல். அங்கு காலாற நடக்க இடமாவது கிடைத்தது”.

தொப்புள்கொடி உறவென நம்பவைத்துத் தன்னை நம்பி வரும் ஈழத்தமிழர்களைச் சித்திரவதை செய்து கொல்வது, தி.மு.க அரசுக்குப் புதிதான விடயமல்ல. பார்வதி அம்மாள் விடயத்தில் தி.மு.கவும், கருணாநிதியும் ஆடிய நாடகம் உலகப் பிரபலமானது. இதைப் புரிந்துகொள்ளாத அப்பாவிகளான சாந்தனும், அவரது அன்பிற்கினிய அம்மாவும் தமிழக அரசை நம்பினார்கள். எனவே அவரின் விடுதலைக்கான நாட்கள் வாரங்களாகின. வாரங்கள் மாதங்களாகின. மாதங்கள் இணைந்து வருடம் ஒன்றைக் கடந்தது. சாந்தனை நாட்டுக்கு அனுப்புவதில் எவ்வித முன்னேற்றமும் நடக்கவில்லை.

யாழ்ப்பாணத்தின், உடுப்பிட்டி கிராமத்தில் வசித்த 77 வயதைக் கடந்த அவரின் தாயாரோ, மகனின் வருகைக்காக தன் வீட்டையும், சுற்றத்தையும் விழாக்கோலப்படுத்தினார். மகன் என்னவெல்லாம் விரும்பி உண்பாரோ, அதையெய்யலாம் வாங்கி, அதனை வைத்துப் பாதுகாக்கத் தனி இராக்கையும் செய்து பரபரப்பாகினார். அந்த இராக்கைக்குள் நெற்றமோல்ட், மலிபன் பிஸ்கட், அப்பிள், இனிப்புக்கள் எனப் பலதரப்பட்ட உணவுப்பொருட்கள் காலாவதியாகிக் கிடந்தன. “என்ர மகன் வந்ததும், என்ர கையால சமைச்சி ஒருவேளை சோறு தீத்திவிட்டால், நான் நிம்மதியாக் கண்ணமூடிடுவன். அதுமட்டுமே எனக்குப் போதும்” என்பதே இந்த உணவுப் பொட்டலங்களுக்கு மேலான அந்தத் தாயின் பெருவிருப்பாக விருந்தது.

கடந்த 33 வருடங்களாக மகனின் விடுதலைக்காகக் கடவுளோடு நடத்திய போராட்டங்களை மீளமீள நினைவு படுத்தி பக்தியால் உருகினார். வைத்த நேர்த்திகளையும், செய்த பிரார்த்தனைகளையும் தன்னை மறந்தும்கூட, மறந்துவிடக்கூடாதென்பதற்காக மீளமீள நினைவுபடுத்திக் கொண்டிருந்தார். மகன் வீடு வந்ததும் வல்வெட்டித்துறை அம்மன் கோயிலுக்கு அவரை விற்பது தொடங்கி, மம்மில் பிள்ளையாருக்குக் காவடி வரை சாந்தன் அவர்கள் தன் மிகுதி நாட்களைக் கடவுளோடு மாத்திரமே கழிக்கும்படிக்கு, அவரின் நேர்த்திப் பட்டியல் நீளமாக இருந்தது. சாந்தன் அவர்களும் அதற்கு விதிவிலக்கானவரல்ல. சிறைக்கூடத்துக்குள்ளேயே அவர் ஒரு சாமியாராகத்தான் வாழ்ந்தார் என்கின்றனர் சக சிறையிருப்பாளர்கள்.

இந்த (2024)வருடத் தொடக்கத்திலிருந்து, சாந்தன் நோய்வாய்ப்படத்தொடங்கினார். அவரது உடல்நிலை பலவீனமடையத்தொடங்கியது. திடீரென உடல் மெலிந்தார் சாந்தன். தியானத்தாலும், யோகாப் பயிற்சியினாலும், கட்டுடலாக இருந்த சாந்தன், திடீரென கட்டுடைந்து போனார். சுயமாக எழுந்து நிற்கவே முடியாதவரானார். அடைத்துவைக்கப்பட்டிருந்த சிறையறைக்குள்ளிருக்கும் தடுப்புச் சுவரைப் பிடித்தே எழுந்து நிற்க அவரால் முடிந்தது. அவரின் திடீர் உடல்நலக் குறைவைக் கவனத்தில்கொண்ட சட்டத்தரணி புகழேந்தி, உடனடியாகவே மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்தார். “அதொன்றும் தேவையில்ல. என்னை வீட்டுக்கு அனுப்ப அலுவல் பாருங்கோ. அம்மாவின் கையால் ஒரு வேளை சோறு சாப்பிட்டால் எல்லா நோயும் குணமாகிடும்” எனச் சொல்லி, விடாப்பிடியாக இருந்துவிட்டார் சாந்தன்.

அதற்குப் பிறகு, அவரின் சகோதரன் உள்ளிட்ட நண்பர்கள், செயற்பாட்டாளர்கள் மேற்கொண்ட அழுத்தங்களின் காரணமாக சாந்தன் மருத்துவமனைக்குச் செல்ல சம்மதித்தார். அதன்படி, திறந்தவெளி சித்திரவதைக் கூடத்திலிருந்து தப்பித்து, சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் தஞ்சமடைந்தார். அங்கும் சட்டத்தரணியைத் தவிர வேறு யாராலும் அவரை அவ்வளவு இலகுவில் பார்க்க முடியவில்லை. ஏகப்பட்ட பாதுகாப்புக் கெடுபிடிகள் இருந்தன. அவருக்கு என்ன நோய் என்பதையும், அதற்குரிய மருத்துவ சான்றுகளையும் சட்டத்தரணிக்குத் தெரிவிக்கவே பல வாரங்கள் எடுத்துக்கொண்டது ராஜீவ் காந்தி மருத்துவமனை. “சாந்தனுக்கு என்ன வருத்தம் என்பதை அறிந்துகொள்ளவே முடியேல்ல” என்பதை அவரைப் பார்த்துவரச் சென்ற பலரும் சொன்னார்கள்.

இலங்கை அரசும், இந்திய அரசும் அவரை நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளுக்கு பச்சைக்கொடி காட்டின. ஆனால் அவரின் உடல்நிலையோ விரைவாக மோசமடையத்தொடங்கியது. வான்வெளி அவசர விமானத்திலாவது அவரை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. சாந்தனின் சகோதரன் சென்னைக்கு சென்றார். மருத்துவமனையில் தனது தமையனைச் சந்தித்தார். நீண்டதொரு இடைவெளிக்குப் பின் தன் சகோதரனைக் கண்ட சாந்தன், “நீ என்னை விட்டுப் போகாத. நீ என்னை விட்டுப் போகாத..எனக்குப் பக்கத்திலேயே நில்லு..” எனத் தளதளத்தபடி, ஒரு குழந்தையைப் போல அழுதார். அதே குழந்தையின் சாயலில் தனதுடலுக்குள் மருந்தேற்றப்பட்ட இடங்களையெல்லாம் அன்பாகத் தன் சகோதரனுக்கு காட்ட முயற்சித்தார். அவ்வாறு முயற்சிக்கும்போது அவரின் கண்களில் பயம் இருந்தது. ஏக்கம் இருந்தது. கவலை இருந்தது. இயலாமை இருந்தது. இத்தனை உணர்வுகளும் மேலிட சாந்தன் அவர்கள் கோமா நிலையை அடைந்தார்.

இனியும் தாமதிப்பது தவறு எனச் சுதாகரித்துக்கொண்ட, அவரோடு கூட நின்றவர்கள், கோமா நிலையுடனாவது அவரது தாயாரிடத்தில் ஒப்படைத்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில் துரிதப்பட்டனர். யாழ்.போதனா மருத்துவமனையுடன் கதைத்து, அவரை இங்கு அழைத்து வந்ததும் செய்யவேண்டிய மருத்துவத்திற்கும் அனுமதி பெற்றனர். இவ்வாறாக எல்லா வேலைகளும் துரித கதியில் பூர்த்தியாகின. எனவே சாந்தனின் இறுதிநாள் இரவு சென்னையில் தொடங்கியது. மறுநாள் தன் தாய்நிலத்துக்கு அழைத்துவரப்படுகிறார் என்கிற செய்தி, ஈழத்தமிழினத்தை சந்தோசத்தில் திளைக்கச் செய்தது.

சமநேரத்தில், மூத்த மகனை அழைத்துவரச் சென்ற கடைசி மகன், வெற்றியோடு திரும்பிவருகிறான் என்ற பூரிப்பில் சாந்தனின் அம்மா வீட்டினை சுத்தப்படுத்தினார். அவர் விரும்பும் உணவுகளை செய்துமுடித்துவிட்டு, 33 வருடங்கள் கழித்து தம் வீட்டுப் படலையைத் திறந்து வரும் மகனின் அழகை ரசிக்கப் படலை மீது விழிவைத்திருந்தார். இதுவரை காலமும் கவலையிலும், ஏக்கத்திலும் கலங்கிக்கொண்டிருந்த அந்த முதிய கண்கள், முதற்தடவையாக பீறிட்ட அன்பினால் கண்ணீரைச் சொரிந்தன. இது தானே தான் இழக்கப்போகும் இறுதிக் கண்ணீர்த்துளிகள். எனவே தாராளமாக பெருகட்டும் எனப் பொறுத்திருந்தார் அந்த ஈழத்தாய்.

இந்தத் தாயின் மொத்த எதிர்பார்ப்புக்கும் சென்னையில் தொடங்கிய சாந்தனின் இறுதி இரவு முற்றுப்புள்ளியெழுதியது, அதிகாலை வேளையில் ஏற்பட்ட மாரடைப்பினால் சாந்தன் அவர்கள் அமரத்துவமடைந்தார். தன் தாயின் கையால் ஒரு வேளை சோறுண்ண வேண்டும் என்கிற அவரின் கனவும், தன் மகனுக்கு ஒரு வேளை சோறூட்ட வேண்டும் என்ற சாந்தனின் தாயின் கனவும் வெறுங்கனவாகவே முடிந்தன. மறுநாள் காலை "சாந்தன் இறந்தார்" என்ற பெரும் பழிச்செய்தியுடன் விடிந்தது. இந்தப் பழி தமிழகம் - இந்தியா - இலங்கை என முத்தேசங்களையும் எரிக்கவல்லது. நீதியைத் தாமதித்து ஒருவரைப் படுகொலை செய்யத்துணிந்த அனைவரையும் பழிதீர்க்கும் வலிகொண்டது.

சாந்தன் உயிர் காவுகொள்ளப்பட்டது என்ற செய்தி ஊடகங்களை ஆக்கிரமிக்க அடுத்த பிரச்சினை ஆரம்பித்தது. வழமைபோல இதுபோன்ற சாவுச்செய்திகளுக்காகக் காத்திருக்கும் தமிழக ஊடகங்கள், குழப்பமான செய்தியை வெளியிட்டன. சில ஊடகங்களில் அவர் இறந்துவிட்டார் எனவும், சில ஊடகங்களில் அவர் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார் எனவும் செய்திகள் வந்தன. இறுதியாக மருத்துவமனையின் உத்தியோகபூர்வ அறிவிப்பின் ஊடாக சாந்தனின் மரணம் உறுதியாகியது. அதற்கடுத்து, அவரின் வெற்றுடலை எப்படி நாட்டுக்குக் கொண்டு வருவது எனவும், அவர் உயிர் பிரிந்தது என்கிற செய்தியை அவரின் தாயாருக்கு எப்படி சொல்வது என்பதும் தான் அடுத்தடுத்துக் காத்திருந்த பிரச்சினைகள்.

சென்னையின் ராஜீவ்காந்தி மருத்துவமனை முன்றலில் பொதுமக்களது அஞ்சலிக்காக சாந்தனின் உடலம் வைக்கப்பட்டபோது, திருமாவளவன், சீமான், நளினி ஆகியோர் நேரடியாக அஞ்சலி செலுத்தினர். இவர்களோடு தமிழுணர்வாளர்களும் இணைந்துகொண்டனர். இவர்களைத் தாண்டி, காலகாலமாக ஈழ ஆதரவு அரசியல்கட்சிகளாகத் தம்மைக்காட்டிக்கொண்ட கொளத்தூர் மணி, வைகோ, பழ.நெடுமாறன் உள்ளிட்ட எவருமே அங்கு வரவுமில்லை. அஞ்சலி செய்யவுமில்லை. இந்த மரணத்திற்குப் பொறுப்புச்சொல்ல வேண்டிய தமிழக அரசு இதுவரை வாய்திறக்கவுமில்லை. அவரின் உடலை வைத்து தமிழகத்தில் அஞ்சலிக் கூட்டங்களோ, அரசியல் உரைகளோ நடத்தக்கூடாது. அவரின் உடலத்தை எவ்வளவு விரைவாக இலங்கைக்கு அனுப்ப முடியுமோ, அவ்வளவு விரைவாக அனுப்பி வையுங்கள் என்கிற பணிப்பை விடுத்துவிட்டு, அதனைக் கவனித்துக்கொண்டிருந்தது தமிழக அரசு.

அன்றிரவே சென்னை விமான நிலையத்தின் ஊடாக, கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு சாந்தனின் உடலம் அனுப்பிவைக்கப்பட்டது. அங்குதான் அடுத்த பிரச்சினை ஆரம்பித்தது. விமான நிலையத்தில் நிரப்பப்படும் படிவம் ஒன்றில், உடலத்தின் பெறுபவரின் பெயர் குறிப்பிடவேண்டிய இடத்தில், சாந்தனது பெயரை எழுதிவிட்டனர். அதுவொரு குற்றமாகக் கருதப்பட்டு, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க 06 மணிநேரம் தாமதம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, சாந்தனின் உடலத்தை இலங்கையின் மருத்துவ முறைகளின்படி, பரிசோதனை செய்வதற்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. அங்கும் பலகட்ட தாமதங்கள் ஏற்பட்டன.

இதற்கிடையில், கொழும்பு சென்று சாந்தன் அவர்களின் உடலத்தைப் பெற்றுவருவதில் குழப்பங்கள் ஏற்பட்டன. முதலில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமே, உடலத்தைப் பொறுப்பேற்று, இறுதி அஞ்சலிக்காகத் தமிழர் தாயகம் முழுவதும் எடுத்துச்செல்வது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு உடன்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள், வாகன ஒழுங்குகளைச் செய்துதரக் கேட்டிருந்தனர். வாகன ஒழுங்குகள் எல்லாம் முடிந்தபின்னர், பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழைப்பெடுக்க, அவர்களோ தொலைபேசிக்குப் பதிலளிப்பதற்கு மறுத்துவிட்டனர். மாணவர்கள் சாந்தனின் உடலத்தைப் பொறுப்பெடுக்கவோ, அவருக்கான அஞ்சலியைச் செய்யவோ கூடாது எனக் கண்டிப்பான உத்தரவை அயலநாடு விதித்திருந்ததாம். எனவே மாணவர்கள் அதற்குள் கட்டுப்பட்டுப் போனார்கள். இறுதியாக, தமிழ் அரசியல் கைதிகளுக்கான குரலற்றோர் அமைப்பு முன்வந்து, துணிந்து களத்தில் இறங்கியது. அந்தத் துணிச்சலுக்கு அந்த அமைப்பினர் அனைவரும் முன்னாள் போராளிகளாக இருந்தமையும், அவர்கள் தம் சக தோழனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்தமையும் பிரதான காரணங்கள்.

சாந்தன் அவர்களின் உடலம், கட்டுநாயக்கா கொண்டுவரப்பட்டதிலிருந்து மறுநாள் இரவு, நீர்கொழும்பு மருத்துவமனை



யினால் குரலற்றோர் அமைப்பிடம் கையளிக்கப்பட்டது. 24 மணிநேரமாக அவரது உடலத்தை வைத்து, இலங்கை அரசு தாமதப்படுத்தியபோதும், தமிழ் அரசியல்வாதிகள் எவரும் இதுவிடயத்தில் தலையிடவில்லை. குறைந்தபட்சம் மருத்துவமனைக்கு சென்று என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கக்கூட முன்வரவில்லை.

சாந்தன் அவர்களின் உடலம் வவுனியாவிற்கு அதிகாலை கொண்டு வரப்பட்டது. திட்டமிட்டபடி, காலை 8.00 மணிக்கு வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கேயும் பொலிஸார் நுழைந்து, உடலம் தாங்கி வரும் ஊர்தியின் சாரதியைக் கைதுசெய்வோம் என மிரட்டினர். பொதுமக்களின் போக்குவரத்திற்கு அந்த ஊர்தியும், அஞ்சலி நிகழ்வு தடையேற்படுத்துகிறது என்பதே அவர்களின் குற்றச்சாட்டு. இதனையெல்லாம் கடந்து, வவுனியாவில் பெருமளவான மக்கள் தன்னெழுச்சியாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மயூரனைத் தவிர வேறெந்த அரசியல்வாதிகளும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

அங்கிருந்து புறப்பட்ட சாந்தன் அவர்களின் இறுதி ஊர்வல ஊர்தி, வழிநெடுக நின்ற மக்களைத் தரிசித்து வந்தது. மாங்குளம் சந்தியில் தரித்துநின்றபோது, அங்கு குவிந்திருந்த பெருமளவான மக்கள் அஞ்சலி செய்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தொண்டர்களும், தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பீற்றர் இளஞ்செழியனும் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அடுத்து கிளிநொச்சியில் பசுமைப் பூங்காவில் அஞ்சலி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சாந்தனைத் தாங்கிய நினைவூர்தி மாங்குளம் கடக்கும்வரைக்கும் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் அஞ்சலி செய்வதே திட்டமாக இருந்தது. மாங்குளத்தைக் கடந்ததும், கிளிநொச்சி பிரதேச சபையின் செயலாளர் அஞ்சலி நிகழ்வுக்கு அனுமதி தரமுடியாது என விடாப்பிடியாக இருந்துவிட்டார். இத்தனைக்கும் குறித்த அஞ்சலி நிகழ்வினை அந்தப் பூங்காவில் செய்வதற்கு வாடகையாக 30000 ரூபாயை பிரதேச சபை கோரியபோது, அதற்கு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் சம்மதமும் தெரிவித்திருந்தனர். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அழுத்தம் கொடுத்த அதே தரப்பு, பிரதேச சபையின் செயலாளரையும் மிரட்டியிருக்கலாம். எனவே கிளிநொச்சியை அடைந்த சாந்தனின் ஊர்வல ஊர்தி, பொது இடமொன்றில் தரித்தது. அங்கு திரண்டிருந்த பெருமளவான தமிழ் மக்கள் கண்ணீர்மல்க தம் நினைவஞ்சலியைத் தெரிவித்தனர். தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நிகழ்வில் கலந்துகொண்டு, சாந்தனின் உடலத்திற்கு செங்கொடி போர்த்தினார்.

அங்கிருந்து புறப்பட்டு, பரந்தன், பளை, இத்தாவில், கொடிகாமம் பகுதிகளில் தரித்த அஞ்சலி ஊர்தி, நீர்வேலிச் சந்திக்கு 2.40 மணிக்கு வந்தது. அவ்விடத்திலிருந்து அஞ்சலி ஊர்தியுடன் வேலன் சுவாமிகள், பல்கலைக்கழக மாணவர்களுடன் பெருமளவான பொதுமக்களும் இணைந்துகொண்டனர். 4.00 மணியளவில் தீருவில் மைதானத்தை அடைந்தது சாந்தன் அவர்களின் உடலாம். அங்கு திரண்டிருந்த பல்லாயிரம் உணர்வாளர்கள், வரிசையாக சென்று மலரஞ்சலி செலுத்தினர். மக்களோடு மக்களாக, ஏராளமான முன்னாள் போராளிகளும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாண சபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், சுகிர்தன், முன்னாள் யாழ்.மாநாகரசபையின் மேயர் மணிவண்ணன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ், முன்னாள் பருத்தித்துறை நகர தவிசாளர் அனந்தராஜ், சதீஸ், முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் பார்த்தீபன், ஜோன் பிறிட்டோ, தர்சானந்த் ஆகிய அரசியல்வாதிகளும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். நினைவுரையினை ஆற்றுவதற்கு அழைக்கப்பட்ட தமிழக சட்டத்தரணி புகழேந்தி அவர்கள், ஒலிவாங்கியைப் பிடித்து நாலுவார்த்தைகள் பேசியவுடன் பீறிட்ட அழுகையினால் இடையில் நிறுத்திக்கொண்டார்.

அன்று மாலை 6.30 மணிவரை தீருவில் மைதானத்தில் வைக்கப்பட்டிருந்த சாந்தன் அவர்களின் உடலம் 7.30 மணியளவில் அவரின் சகோதரியின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அண்ணா உயிரோடு வருவார் எனக் காத்திருந்த தங்கை, அண்ணாவின் வெற்றுடலத்தைப் பார்த்ததும், குட்டி அண்ணா வாங்கோ..உள்ள வாங்கோ..அண்ணா வாறார் யாரும் அழக்கூடாது. அழவேண்டாம்” எனக் கூறியபடி ஆரத்தி எடுத்தார். தன் மொத்த எதிர்பார்ப்பும், 33 ஆண்டுகால கனவும் வீணாகிப் போனதை உணர்ந்த ஈன்றதாயினால் எப்படி அழாமல் இருக்க முடியும். பெருஞ்சத்தமெடுத்து அழுதார். கூடவே கூடிநின்றவர்களும் வான்வெடிக்க அழுதனர். அந்த இடமெங்கும் கண்ணீரால் நிரம்பியது.

இரவு முழுவதும் நீள்துயிலில் இருந்த சாந்தன் அண்ணையின் இறுதிப் புவிநாள் விடிந்தது. காலை 10.30 மணிக்கு வீட்டுச் சடங்குகள் ஆரம்பித்தன. வீட்டுச்சடங்குகள் நிறைவடைய 12.30 மணிக்கு அவரின் சொந்த வீட்டுக்கு சாந்தன் அண்ணையின் உடலம் எடுத்துச்செல்லப்பட்டது. அங்கு அவரை ஆராத்தியெடுத்து வரவேற்ற தாயார், வீட்டுக் கிணற்றுத் தண்ணீர் பருக்கினார். அவர் வந்தவுடன் கொடுப்பதற்காக வாங்கிவைத்திருந்த உணவுகளை ஊட்டினார். தன் மகன் உயிரோடு வரும்போது ஆற்றவேண்டிய அத்தனை காரியங்களையும், உடலமாகிக் கிடக்கும் தன் மகனுக்கு நிறைவேற்றினார். அவரின் எல்லாச் செயல்களிலும் மானுடகுலம் இதுவரை அனுபவித்திராத வலி இருந்தது. கனம் இருந்தது. தன் கையினால் தன் மகனுக்கு ஒரு பிடி சோறூட்ட ஆசைப்பட்டது அவர் செய்த குற்றமா? அல்லது தன் தாயின் கையினால் ஒரு பிடி சோறு வாங்கிச் சாப்பிட ஆசைப்பட்டது சாந்தன் செய்த குற்றமா? என்பது தெரியாமல் மக்கள் தவித்து நின்றனர். அம்மா தன் மகனுக்கு வாய்க்கரிசி இட்ட கணத்தை நினைந்துருகினர்.

எல்லாம் நிறைவடைய வாசிகசாலையில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழகத்திலிருந்து வந்திருந்த சட்டத்தரணி புகழேந்தி 17 நிமிட உரையாற்றினர். அந்தப் பதினேழு நிமிட உரைக்குள் சாந்தன் குற்றமற்றவர் என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தார். உயிரோடு இருக்கும் வரைக்கும் பேசப்படாத எந்த உண்மைகளையும் இனி உரக்கப்பேசி என்ன பயன் என்கிற தோரணையில் மக்கள் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆயினும் சாந்தனுக்கு மாத்திரமல்ல, இந்தியாவினால் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்படும் அனைத்துத் தேசத்தவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பல விடயங்களை அவர் குறிப்பிட்டார். அவரின் உரையைத்தொடர்ந்து வந்த, முருகனின் அஞ்சலிக்குறிப்பானது ஏக்கத்தையும், கவலையையும், நம் இனத்தின் பலவீனத்தையும் வெளிப்படுத்தியது.

அந்த நினைவஞ்சலி பெரும் கனதியோடு நிறைவடைய இறுதி ஊர்வலத்திற்குத் தயாரானார் சாந்தன். மகனை விட்டுப்பிரியாத அம்மா, அந்த ஊர்தியிலேயே வந்தார். வடமராட்சியின், உடுப்பிட்டி - வல்வெட்டித்துறையை வலைப்பின்னலாக்கிவைத்திருக்கும் பல சிறுவீதிகள், சனசமூக நிலையங்கள் கடந்து, அவரின் உடலத்தை தாங்கிய ஊர்தியானது தமிழீழத் தேசியத் தலைவரின் இல்ல முன்றலில் நின்றது. அங்கு திரண்டிருந்த மக்கள், மாவீர இசையோடு இணைந்து, மலரஞ்சலி செலுத்தினர். தேவாரம் இசைத்தனர்.

அங்கிருந்து புறப்பட்டு எள்ளங்குளம் மயானத்தை அடைந்தது சாந்தன் அண்ணையின் வெற்றுடல். அங்கு வெட்டப்பட்டிருந்த எட்டடி கிடங்கிற்கு முன்பாக இறக்கப்பட்டு, பன்னீர், திருநீறு சாத்தப்பட்டது. பின்னர் ஒரு பிடித் திருநீற்றைத் தாயார் சாத்த, சாந்தன் விதைக்கப்பட்டார். அங்கு விதைக்கப்பட்ட பல நூறு தோழர்களோடு சாந்தனும் இணைந்துகொண்டார். எனவே அவர் புனித விதைகுழியிலிருந்து புதிதாய் முளைக்கப்போகும் விதையானார். அதற்காக விதைக்கப்பட்டார்.

மாவீரர் பண் இசைக்க, வரிசையில் வந்தவர்கள் விதைகுழியைச் சூழ வந்து திருநீற்றினை போடுவது, நீண்டதொரு இடைவெளியின் பின்னர் மாவீரர் ஒருவரை துயிலுமில்லத்தில் விதைத்துவிட்டு வரும் உணர்வைத் தந்தது. தடைகள், சதிகள், சூழ்ச்சிகள் கடந்து இவ்வினத்தை சுதந்திர எழுச்சிகொள்ளச்செய்ய வந்த காலத்தூதனாக சாந்தன் விண்ணில் தெரிந்தார். பிரகாசிக்கும் நட்சத்திரமானார்.

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# அங்குரார்ப்பண "தமிழ் மரபு அமர்வு ஆஸ்திரேலியா 2024" அறிவுசார் கலந்துரையாடலை முன்னிறுத்திய பல்லின சமூகங்களைச் சேர்ந்த மரபு ஆர்வலர்களை ஒருங்கிணைத்த முன்மாதிரியான நிகழ்வு

தமிழர்களின் வாழ்வியியலில் அதிமுக்கியத்துவத்தைப் பெறும் தை மாதத்தினை "தமிழ் மரபுத் திங்கள்" எனப் பிரகடனப்படுத்தி, தை மாதம் முழுவதும் தமிழ் மரபு சார்ந்த நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம், வாழும் தேசமெங்கும் செழுமையான தமிழ் பாரம்பரியத்தை பாதுகாத்து கொண்டாடுவதன் அவசியத்தை வெளிப்படுத்தி, அதனை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள எம் சமூகம் முனைந்து நிற்கின்றது. கனடாவில் 2010ம் ஆண்டு தொடங்கிய இந்த கருத்தியக்கம், 2014 இல் Onatario மாநில அரசாங்கத்தையும், 2016இல் கனடிய மத்திய அரசாங்கத்தையும் , தமிழ் மரபுத் திங்களை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வைத்தது. கனடியத் தமிழர்களின் முன்மாதிரியான முயற்சி , உலகளாவிய ரீதியில் தமிழர்களை தமிழ் மரபுத் திங்களை கொண்டாடத் தூண்டியது. ஆஸ்திரேலியாவில், விக்டோரிய மாநிலத்தில் 2015இல் முளைகொண்ட இந்த கருத்தியக்கம், 2019இல் உத்வேகம் கொள்ளத் தொடங்கியது. 2019 ஆண்டு, தைப்பொங்கல் கொண்டாட்டம் "தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா" என தமிழ் அடையாளத்தை முன்னிறுத்தி கொண்டாடப்படத் தொடங்கியது - விக்டோரிய நாடாளுமன்றத்தில் கன்னிப்பொங்கல் அரங்கேறியது - தை மாதம் முழுதும் தமிழ் மரபு குறித்த நிகழ்வுகளை நடாத்தும் முனைப்பு ஏற்பட்டது.

இந்த ஆஸ்திரேலிய முயற்சியின் நீட்சியாக இந்த ஆண்டு, அங்குரார்ப்பண "தமிழ் மரபு அமர்வு ஆஸ்திரேலியா 2024", தமிழ் மரபு குறித்த ஆர்வத்தை , கலந்துரையாடலை எம் இளைய தலைமுறையினர் , பரந்த ஆஸ்திரேலியா சமூகம் உட்பட்ட பல தளங்களில் உருவாக்குதல் - பாரம்பரியத்தை, சமூக தலைமைத்துவத்தை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதில் உள்ள சவால்கள் குறித்து வேறுபட்ட சமூகங்களின் பரஸ்பர அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் - வரவிருக்கும் தலைமுறைகளில் நமது பாரம்பரியத்திற்கான ஆழமான மதிப்பை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்புடன் செயல்படுதல் உள்ளிட்ட பலவற்றை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அங்குரார்ப்பண தமிழ் மரபு அமர்வு 2024, Monash பல்கலைக்கழகத்தின் , ஊடயலவழுெ வளாகத்தில் , 21 ஜனவரி 2024 அன்று பிற்பகல் 4:00 மணி முதல் 8:00 மணி வரை நடைபெற்றது. தமிழ் மரபு ஆர்வலர்கள், இளைய




தலைமுறையினர் என இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து சிறப்புச் செய்தார்கள்.

தமிழ் தாய் வாழ்த்து மற்றும் தேசிய கீதத்துடன் ஆரம்பித்த நிகழ்வை திரு. பிரசன்னா சந்திரகுமார் தொகுத்து வழங்கினார். தமிழ் மரபு அமர்வு ஆஸ்திரேலியாவின் ஒருங்கிணைப்பாளர் திரு.கு. சிவசுதன் அவர்கள் , இந்த மரபுக் கருத்தரங்கின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் பகிர்ந்த தொடக்கவுரையை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பன்னாட்டு அறிஞர்கள் சிறப்புரையாற்றினார்கள். சிறப்புரையாற்றிய ஆஸ்திரேலிய தேசிய மொழிக்கல்வி கொள்கையை வகுத்த Melbourne பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் Joesph Lo Bianco, தமிழ் மரபு ஆராய்ச்சியாளர் மா சோ விக்டர் மற்றும் எழுத்தாளர் அ முத்துகிருஷ்ணன் ஆகியோர் தமிழ் மரபு குறித்த தம் அபிமானத்தை பகிர்ந்து, அதனை பேணிப் பாதுகாக்க வேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள்.

நிகழ்வின் ஓரங்கமாய், எம் இளைய தலைமுறையினர், நம் பாரம்பரியத்துடனான தங்கள் தொடர்பையும் தம் எதிர்பார்ப்புகளையும் ஆர்வத்துடன் மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகிர்ந்துகொண்ட இளையோர் கருத்துக்களம் இடம்பெற்றது. அதில் கருத்துக்களை பகிர்ந்த துவிஜன் பசுபதிதாசன், துவாரகன் சந்திரன், சரண்யா திருமலைநம்பி, ஆரணன் மதியழகன் மற்றும் காவியன் பத்மசிறி ஆகியோர் தம் தலைமுறையின் எதிர்பார்ப்புகளைப் பகிர்ந்து, முதலாம் தலைமுறையினரால் பெரிதும் கண்டுகொள்ளப்படாத விடயங்களைத் தொட்டார்கள். இந்த நிகழ்ச்சி, அவையினரின் கவனத்தை மிகவும் ஈர்த்ததுடன், இப்படியான கருத்துப்பரிமாறல்கள் தொடர வேண்டும் மற்றும் விரிவாக்கப்பட வேண்டும் என்பதன் அவசியத்தை உணர்த்தியது.

மேலும், தமிழ் மரபு குறித்த இயல், இசை மற்றும் நடனம் இணைந்த நிகழ்ச்சியாய் அமைந்த முத்தமிழ் அரங்கு நிகழ்வுக்கு அழகு சேர்த்தது. திரு. கேதார சர்மாவின் இயலும், ஸ்ரீமதி ராதிகா மகாதேவா மற்றும் பரதகலாஞ்சலி நடனப் பள்ளி மாணவர்களின் நடனமும் , திரு. ஜெ. ஜெயகாந்தன் மற்றும் திரு சி பவித்திரனின் இசையும் இணைந்து வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதிலும், மக்களை மரியாதையுடன் நடத்துவதிலும், பன்முகத்தன்மையை அரவணைப்பதிலும் தமிழ் பாரம்பரியத்தின் நிலைத்த தன்மையை தத்ரூபமாக வெளிப்படுத்தின.

நிகழ்வின் இறுதியில் , தமிழ் மரபு குறித்த ஆக்கபூர்வமான கலந்துரையாடலைத் தொடர்ந்து , திரு. ச. சத்தியன் அவர்கள் நிகழ்வை ஒழுங்கமைக்க கைகொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரவுணவு, கலந்துரையாடல்களைத் தொடரவும் அறிமுகங்களை ஏற்படுத்திக்கொள்ளவும் வழிசமைத்தது.

வழமையான தமிழ் நிகழ்வுகளிலிருந்து வேறுபட்ட வகையில் அமைந்து, அறிவுசார் கலந்துரையாடலை முன்னிறுத்திய - பல்லின சமூகங்களைச் சேர்ந்த மரபு ஆர்வலர்களை, எம் இளைய தலைமுறையினரை ஒருங்கிணைத்த முன்மாதிரியான நிகழ்வாக , இந்த கன்னி தமிழ் மரபு அமர்வு அமைந்தது.




தமிழ் தாய் வாழ்த்து / தேசிய கீதம் இசைத்தோர்
சகானா சேயோன், சாதனா சேயோன்




தொடக்கவுரை: கு. சிவசுதன், ஒருங்கிணைப்பாளர், தமிழ் மரபு அமர்வு, ஆஸ்திரேலியா





நிகழ்வு தொகுப்பு: பிரசன்னா சந்திரகுமார்



திரு மா சோ விக்டர் , தமிழ் மரபு ஆய்வாளர், தமிழ் நாடு



திரு அ.முத்துகிருஷ்ணன், எழுத்தாளர், தமிழ் நாடு




நன்றியுரை: திரு ச சத்தியன், தமிழ் மரபு அமர்வு ஆஸ்திரேலியா

# அங்குரார்ப்பண "தமிழ் மரபு அமர்வு ஆஸ்திரேலியா 2024" அறிவுசார் கலந்துரையாடலை முன்னிறுத்திய பல்லின சமூகங்களைச் சேர்ந்த மரபு ஆர்வலர்களை ஒருங்கிணைத்த முன்மாதிரியான நிகழ்வு
















# அச்சங்களை எழுப்பும் சட்டமூலங்கள்



(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது சில பொருள்கோடல் தெளிவற்ற தன்மைகள் அமுலாக்கத்தில் சட்டமூலமொன்று உருவாக்கப்பட்ட வேண்டிய நோக்கங்களுக்கு முரணாகச் செல்லலாம் எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

அத்துடன் தடுப்புக்காவல் கட்டளைகள் பெறுதல் விடயத்தில் காணப்படும் ஏற்பாடுகளும் ஏற்கனவே இருக்கின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டப்பிரிவுகளுக்கு அப்பால் செல்லலாம் என விமர்சிக்கப்படுகின்றது. இந்தச்சட்டமானது காரணமின்றி கைது செய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதல் ஆகிய விடயங்களில் இருந்து பாதுகாப்பு பெறும் உரிமை, காணாமல் ஆக்கப்படுதலில் இருந்து பாதுகாக்கப்படும் உரிமை, சித்திரவதைகள், கொடூரமான -மனிதாபிமற்ற இழிவான நடத்தைகளுக்கு உட்படாமல் இருக்கும் உரிமை, அந்தரங்கங்களைப் பாதுகாக்கும் உரிமை, சட்டத்தினால் அன்றி தண்டனைக்கு உட்படுத்தப்படாமல் இருக்கும் உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் சர்வதேச மனித உரிமை நியமங்களை மீறுவதாக பல சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்புகளால் குற்றஞ்சாட்டப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


இச்சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில், இச்சட்டமூலத்தின் சில ஏற்பாடுகள் அரசியலமைப்பின் அடிப்படை ஏற்பாடுகளாக அல்லது மக்கள் தீர்ப்புடன் திருத்தப்பட வேண்டிய ஏற்பாடுகள் எனக் கூறும் ஏற்பாடுகளுடன் முரண்படுவதாகத் தீர்ப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த சட்டமூலத்தின் 75.3 ஆம் பிரிவு அரசியலமைப்பின் மூன்றாம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நான்கு 'இ' எனும் உறுப்புரையான மக்களது நீதிமுறை தத்துவமானது நாடாளுமன்றத்தினதும் அதன் உறுப்புரையினதும் சிறப்புரிமைகள் , விடுபாட்டுரிமைகள், தத்துவங்கள் என்பன பற்றிய கருமங்களின் விடயங்கள் தவிர அரசியலமைப்பினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட நீதிமன்றங்கள் மற்றும் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் ஆகியன மூலம் நாடாளுமன்றத்தினால் பிரயோகிக்கப்பட வேண்டும் என்ற உறுப்புரையை மீறுவதாக உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பினை சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளது. குற்றப்பகிர்வை மீளப்பெறுதல் எனும் ஏற்பாடு இலங்கை அரசியலமைப்பையும் நீதித்துறை சார் இறைமையை மீறுவதாக உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு இந்தச்சட்டமூலத்தின் ஆபத்தினை வெளிப்படுத்தி உள்ளது .

இதற்கு மேலதிகமாக சட்டமூலத்தின் 72 இன் முதலாம் சரத்தானது அரசியலமைப்புக்கு விரோதமானது எனவும் அது அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரை அடையாளப்படுத்தும் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைவதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் தீர்ப்பு தேவை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதாவது விளக்கம் முடியும் வரை சந்தேகநபரொருவரை தடுத்து வைத்தலுக்கான அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு வழங்கும் ஏற்பாடு அரசியலமைப்பின் அடிப்படை ஏற்பாடுகளுடன் முரண்படுவதாக உயர் நீதிமன்றம் சுட்டி காட்டி இருக்கின்றது. இந்த ஏற்பாடு அரசியலமைப்புடன் தொடர்பு படுத்தி வாசிக்கக் கூடிய '4 இ' உறுப்புரையான நீதிமன்றங்களின் நீதிசார் இறைமையை குறை மதிப்புக்கு உட்படுத்துவதாக ஏற்கனவே குற்றஞ்சாட்டப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இச்சட்டமூலத்தின் மூன்றாம் பிரிவு கூறும் பயங்கரவாதம் என்னும் தவறை வரையறுக்கும் பிரிவு, சந்தேக நபரொருவரை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான சட்டத்தரணியின் உரிமை தொடர்பான பிரிவு, ஒரு கலத்தை அல்லது வாகனத்தை நிறுத்துவதற்கான பலத்தை பிரயோகித்தல் தொடர்பான பிரிவு, மற்றும் குற்றப்பகிர்வை இடை நிறுத்தலும் பிற்போடலும் பற்றிய 70 ஆம் பிரிவு ஆகியன தொடர்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையென நீதிமன்றம் தீர்ப்பிட்டிருக்கின்றது. அதாவது இப்பிரிவுகள் அரசியலமைப்பின் 12. 1 இல் குறிப்பிடும் சமத்துவத்துக்கான உரிமையை மீறுவதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது மேற்குறிப்பிட்ட அனைத்து ஏற்பாடுகளும் திருத்தப்பட்டால் சாதாரண பெரும்பான்மை மூலம் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனவே இவ்வாறு இலங்கையில் தொடர்ச்சியாக கொண்டு வரப்படுகின்ற சட்டமூலங்கள் இலங்கையின் எதிர்கால ஜனநாயக முறைமை எவ்வாறு இருக்கும் என்ற அச்சத்தை அனைவர் மத்தியிலும் எழுப்புகின்றது. பல்வேறு நாடுகளில் இவ்வாறான பயங்கரவாத சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்ற போதும் இலங்கை போன்ற நாடுகளின் அரசியல் கலாசாரத்தின் அதன் பயன்பாடு எவ்வளவு ஆபத்தானது என்பதை இலங்கையின் கடந்த கால வரலாற்றை மீள் திருப்பி பார்ப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். சர்வதேச நாடுகளில் சட்ட உருவாக்கத்திலும் அமுலாக்கத்திலும் சர்வதேச மனித உரிமை நியமங்கள் , கோட்பாடுகள் முதன்மைப்படுத்தப்படுகின்ற போதிலும் இலங்கை அதன் நேரெதிர்ப்போக்கில் பயணித்து வருதல் இலங்கையின் ஆபத்தான ஜனநாயகப் பாதையாக அமைகின்றது. நிகழ் நிலை தொடங்கி எதிர்காலத்தில் கொண்டுவரப்போவதாக சர்வதேச தரப்புகள் குற்றஞ்சாட்டும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் , அரச நிர்வாக ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் ஆகியன எத்தகைய விளைவுகளை ஏற்படுத்த போகின்ற என்ற அச்சமே இலங்கை வாழ் மக்களிடம் எழுகின்றது.





தாயக கலாசார ஆபரணங்கள் மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# பூர்வகுடிகளால் மீட்கப்பட்ட அகதிகள்

# அரசியல் களத்தில் அதிர்வு



● சியாமளா யோகேஸ்வரன்

உள்நாட்டுப்போரும், வறுமையும் வாழ வழி தேடித் துரத்த, மேற்கத்தைய நாடுகளில் அகதி அந்தஸ்து கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அரசியற்கட்சிகள் அகதிகளைக் கையாளும் விதமானது பல நாடுகளின் அரசியலிலும், ஆட்சியைத் தீர்மானிப்பதிலும் பெரும் பங்கு வகிக்கும் ஒரு காரணியாக மாறி விட்டிருக்கின்றது.

ஆஸ்ரேலியா என்ற கண்டத்தைச் சுற்றிக் கடல் இருப்பதும், படகுகளில் அகதிகள் வந்து விடுவதும் அரசுக்கு தொடர்ந்து தீராத தலைவலியைக் கொடுத்துக் கொண்டுதானிருக்கின்றது. கடல் எல்லைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படா விட்டால், அத்துமீறி நுழைந்து விடும் படகுகள், அரசியலில் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தி தேர்தல் பிரசாரங்களில் வாக்கு வங்கிகளைத் தீர்மானிக்கும் காரணியாகி விடுவதும் தொடரும் வரலாறாகவே இருக்கின்றது.

அரசாங்கங்கள் நாட்டின் பொருளாதார மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் என்பவற்றின் அடிப்படையி படகுப்பயணங்களுக்கோர் முற்றுப் புள்ளியைத் தேடிக் கொண்டிருந்தன. முழுமையான தீர்வு காணப்படாவிட்டாலும் படகுகளின் வருகை ஓய்ந்து விட்டது என்று கருதப்பட்ட நிலையில் மாசிமாத நடுப்பகுதியில் மேற்கு அவுஸ்ரேலியாவின் ஒதுக்குப் புறமாக உள்ள பீக்லிக்குடாவில் வந்திறங்கிய படகொன்றால் மீண்டும் ஒரு சலசலப்பு அரசியல் மட்டத்தில் உருவாகி விட்டிருக்கின்றது. இந்தோனேசியாவிலிருந்து வந்த இந்தப்படகில் பாகிஸ்தான், பங்களாதேஸ் மற்றும் இந்தியாவையைச் சேர்ந்த சுமார் 40 அகதிக் கோரிக்கையாளர்கள் இருந்தனர்.

யாருமற்ற பிரதேசத்தில் தரை இறங்கியவர்களை இந்நாட்டின் பூர்விகக் குடிமக்கள்தான், உணவும் நீரும் கொடுத்து, காயங்களுக்கு மருந்திட்டு காவற்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் வரை அன்புடன் பராமரித்திருக்கின்றார்கள். பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் தன் உயிரைக் காப்பாற்றவே படகேறியதாகவும் தன் ஐந்து பிள்ளைகளையும் மனைவியையும் பற்றிக் கவலையுறுவதாகவும் காட்டுப் பகுதியில் வந்திறங்கிய தாம் நீர் கூடக் கிடைக்காமல் மரணித்து விடுவோமோ என்று அஞ்சியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் எல்லைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று உரத்துக் குரல் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் கரைகளில் வந்திறங்குபவர்களை மட்டுமே கருத்தில் கொள்கின்றார்களே தவிர வான்வழியால் வந்திறங்கி தஞ்சம் கோருபவர்களைப் பற்றிக் கணக்கில் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆஸ்ரேலியாவின் தற்போதையை குடித்தொகையில் கிட்டத்தட்ட 30 சதவீதமானோர் பிற நாடுகளில் இருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாகவே காணப்படுகின்றனர். 2023 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 190,000 பேர் குடி வந்திருக்கின்றார்கள். இதற்குள் தஞ்சம் கோரி வந்த 23,000 பேரும் அடங்கி இருக்கின்றார்கள். இவர்களில் கடந்த ஆண்டு கடல் மூலமாக 4 படகுகளில் வந்த 74 பேர் உண்மையில் சிறிய தொகையினர்தான். ஆனால் அதுவே ஒரு பேசுபொருளாக மாறி அவுஸ்ரேலிய பிரதம மந்திரியையும் ஆளும் கட்சியையும் உருட்டிக் கொண்டிருக்கின்றது.

நாடுகளின் உள்நாட்டுக் கலவரங்களையும், இனப்பிரச்சினையையும் தொடர்ந்து அங்கிருந்து அரசியல் தஞ்சம் கோரி இங்கு வரும் படகுகளின் எண்ணிக்கை ஒரு காலத்தில் மிக அதிகமாக இருந்தது. எண்பதுகளில் தொடங்கி இலங்கையில் இருந்து தமிழ் அகதிகள் தம் உயிரைப் பணயம் வைத்துப் படகுகளில் ஏறி அவுஸ்ரேலியாக் கரையை வந்தடையும் நிகழ்வு நடந்து கொண்டேதான் இருக்கின்றது என்பதால் ஈழ அகதிகள் பற்றி எல்லோரும் அறிந்திருந்தனர். இவர்களின் பின்புலத்தைப் பற்றித் தீரவிசாரித்து முடிவெடுக்க நீண்ட காலம் எடுக்கும் என்பதால் அவுஸ்ரேலியாவை அடுத்திருந்த தீவுகளான நவ்ரூ, கிறிஸ்துமஸ் தீவு, மற்றும் மனஸ்தீவுகளில் தங்க வைத்து அவர்களுக்கான தேவைகளை அவுஸ்ரேலிய அரசாங்கமே கவனித்து வந்தது. அந்தத் தீவுகளில் அகதிகளாக தங்கவைக்கப்பட்டவர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டமையும் அங்கிருந்தவர்கள் உள்ளூர் அதிகா-ரிகளால் துர்ப்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமையும் சட்டத்துக்குப் புறம்பானது என மனித உரிமை ஆர்வலர்களினால் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. 2016 ஆம் ஆண்டு இதற்கான நட்ட ஈடாக 70மில்லியன் டொலரை அரசாங்கம் செலுத்தியதைத் தொடர்ந்து அகதிகள் தொடர்பான விவகாரம் அவுஸ்ரேலிய அரசியலில் சூடு பிடித்து படகுகளின் வருகையை நிறுத்த, கரையோரப் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

லேபர் கட்சி அகதிகள் தொடர்பில் மென்மையான அணுகுமுறையைப் பின்பற்றுவதாக லிபரல் கட்சி குற்றம் சாட்டியது. படகில் வருபவர்களால் அவுஸ்ரேலியாவின் பாதுகாப்புக் கேள்விக்குறியாக்கப்படுவதையும், பொருளாதாரம் பாதிக்கப்படுவதையும் உணர்ந்த அரசு, படகில் ஆட்களைக் கடத்துபவர்களைக் கட்டுப்படுத்த முதலில் நடவடிக்கை எடுத்தது. அது மட்டுமல்லாமல் நடுக்கடலில் படகுகள் கவிழ்ந்தாலோ அல்லது பழுதாகிப் போனாலோ மாண்டு போகின்றவர்களின் எண்ணிக்கையும் அரசாங்கத்துக்கு இன்னொரு விதத்தில் அழுத்தத்தைக் கொடுத்தது.

இதனைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு "ஒப்ரேசன் சவ்ரின் போர்டேர்ஸ்" என்ற கொள்கை நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றுவரை அமுலில் இருக்கின்றது. இதன்படி படகில் வருபவர்கள் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும் பிற இடமொன்றில் தங்கவைக்கப்பட்டு தற்காலிகப் பாதுகாப்பு விசா வழங்கப்படுமெனவும் அப்போதிருந்த பிரதமர் ரொ-னி அபொட் அறிவித்திருந்தார். அத்துடன் கரையோர ரோந்துகள் பலப்படுத்தப்பட்டு படகில் வருபவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டதுடன் அகதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் சமீபகாலமாகக் குறைந்திருந்தது.

ஆனால் 2022ம் ஆண்டு ஆட்சிப் பீடமேறிய லேபர் கட்சியும் கட்சியின் பிரதம மந்திரியுமான அன்ரனி அல்பனீசும் அகதிகள் தொடர்பாக மேற்கொண்ட சில முடிவுகளும், நடவடிக்கைகளும் மீண்டும் ஒரு சலசலப்பை உருவாக்கி விட்டிருந்தன. ஆட்சிக்கு வந்த நான்கே நாளில் நீதிமன்றால் அகதிகள் அந்தஸ்துக்குத் தகுதியில்லையென்று தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த குயின்ஸ்லாந்தின் பையோலாவைச் சேரந்த ஒரு இலங்கைத் தமிழ்க் குடும்பத்துக்கு நிரந்தர விசாவைக் கொடுத்து அவர்களைச் சந்தித்துப் பேசியதும், 19, 000 அகதிகளுக்கு நிரந்தர விசாவை வழங்கியதும் பெரும் சர்ச்சையாகப் பேசப்பட்டிருந்தது.

அதன் பின்னர் கடந்த ஆண்டு நிரந்தரமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டிருந்த 149 அரசியல் கைதிகளின் பின்புலம் பற்றி விசாரிக்காமலும் அவர்களைக் கண்காணிப்பதற்கு எந்த வழி வகையும் இல்லாத நிலையிலும் விடுவித்திருந்தமை குடிமக்களின் பாதுகாப்புக்குக் குந்தகமான செயல் எனப் பலமாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்டவர்களில் கொலைக்கைதிகளும், பாலியல் குற்றம் தொடர்பான கைதிகளும் அடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதைப்போன்றே கடந்த ஆண்டு ஹாசாப் பகுதியிலிருந்து 860 பலஸ்தீனிய அகதிகள் எந்தப் பின்புல விசாரணையுமின்றி அகதிகளாக உள்வாங்கப்பட்டிருப்பதும், ஆண்டு தோறும் 20,000 வரையிலான அகதிகளை ஆபிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து உள்வாங்கவும் அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவானது எதிர்க்கட்சியினர் மத்தியில் மட்டுமல்லாமல் மக்களிடையேயும் ஒரு எதிர்ப்பலையை உருவாக்கி இருக்கின்றது.

வேலையில்லாப்பிரச்சினை, வீட்டுப் பற்றாக்குறை, வீடுகளின் விலைகள் அசுரவேகத்தில் உயர்ந்து செல்லுதல், பணவீக்கம் என்று பல பிரச்சினைகள் உள்நாட்டில் நிலவும் போது, மேலும் சனத்தொகையை அதிகரிப்பது போன்றதான அரசாங்கத்தின் தீர்மானம் பெரும் வரவேற்பைப் பெறப்போவதில்லை. மாறி வரும் நிலைமைகளை கருத்திற் கொள்ளாமல் அரசாங்கம் எடுக்கும் முடிவானது அரசாங்கத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கி விடக்கூடும்.

பிரதமர் அன்ரனி அல்பனீஸ், இந்த வருட அவுஸ்ரேலிய தின உரையின் போது அவுஸ்ரேலியாவானது வாழ்வதற்கு மிக உகந்த நாடு என்றும் பல்கலாசார நாடும் என்றும் மக்களினதும் பூர்வகுடிகளினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இந்தமாத படகு வருகை சம்பந்தமாக நிருபர்கள் கேள்வி எழுப்பியபோது தான் காரில் பயணம் செய்து கொண்டிருந்ததாகவும் தனக்கு அது பற்றித் தெரியாது என்றும் அவர் கூறியதன் மூலமாக நாட்டின் பாதுகாப்பு மீதான அக்கறையை இழந்து விட்டார் என்று பிரசாரம் செய்பவர்களும் இருக்கின்றார்கள். செல்லிடத் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டு 50 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் அவர் அவ்வாறு கூறியமையும் இரண்டு நாட்களுக்குப் பின்னர் நடந்த நிருபர் கூட்டத்தில் அதைப் பற்றிய தகவல்களைக் கொடுக்காததன் மூலமும் நாட்டு மக்களைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாதவர் என்றும் குறை கூறப்படுகின்றார். அரசாங்கத்தின் கொள்கைகள் வெளிநாட்டினருக்கே சார்பானவையாக இருக்கின்றன என்றும் ,நாட்டு மக்களின் நலன்களைப் பற்றி எந்தவிதமான அக்கறையும் இல்லை என்று ஒலிக்கத் தொடங்கும் குரல்களை அடக்கி, நாட்டு மக்களின் வாக்கை வெல்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் இருக்கின்றது.

அகதிகள் தொடர்பான தீர்மானங்கள் மனிதாபிமான நடவடிக்கைகள் என்று மக்களால் புரிந்து கொள்ளப்படாத நிலையில், அகதிகள் தொடர்பில் தீவிர கடும் போக்கைப் பின்பற்றும் லிபரல் கட்சியின் பிரசாரங்களை முறியடிக்கவும் தமது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவும் அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என்பதையும், அரசாங்கத்தின் தீர்மானங்கள் எந்தவிதமான பின் விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றன என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
CCTV INSTALLATION
INTERCOM DOORBELL
TV WALL MOUNT INSTALLATION
TV ANTENNA
AMPLIFIER SPEAKERS
WASHING MACHINE AND DISHWASHER. INSTALLATION
SOLAR CLEANING, BIRD REFLECTOR
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 1800 960 162


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

கருணாகரன்



# தமிழரசுக் கட்சியின் தலைவிதி என்ன?

நீதிமன்ற வழக்கை முடித்துக் கொண்டு வெளியேறினாலும் தமிழரசுக் கட்சிக்குப் பிரச்சினைகளும் தலையிடியும் மேலும் மேலும் கூடுமே தவிர, குறைந்து விடாது. அதற்கு உள்ளும் புறமுமாகக் கனன்று கொண்டிருக்கும் நெருப்பு அணையுமென்றில்லை. அது நீண்ட நாட்களாகத் தொடர்ந்து கனன்று கொண்டிருந்த தணலின் விளைவு.

முதலில் அதனுடைய யாப்புத் தொடர்பான பிரச்சினை.

"தேர்தல் திணைக்களத்துக்குக் கொடுக்கப்பட்ட - காட்டப்பட்ட - யாப்பு வேறு. கட்சியின் நடைமுறையில் உள்ள யாப்பு வேறு" என்று ஒரு வலிமையான குற்றச்சாட்டு கட்சியின் முக்கியமான உறுப்பினர்களிடையே உண்டு. இதனால் ஏற்பட்ட சிக்கலே இப்பொழுது நீதிமன்றம் வரையில் செல்லும் நிலையை ஏற்படுத்தியது.

அதாவது சட்டபூர்வமான யாப்பு ஒன்றாகவும் கட்சியின் நடைமுறைகளின்போது பின்பற்றப்படும் யாப்பு இன்னொன்றாகவும் இருந்துள்ளது என்று இது பொருள்படும்.

ஏறக்குறைய எழுதப்படாத இரண்டாவது யாப்பின் படியே (நழுவல் யாப்பு) காரியங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதற்கு அண்மைய உதாரணம், மத்திய செயற்குழுவினரும் ஒவ்வொரு தொகுதிக் கிளையிலும் தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினரும் பொதுச்சபை உறுப்பினராவர். இதற்கமைய ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் தலா ஐந்து உறுப்பினர்களே பொதுச்சபை உறுப்பினர்கள். இதன்படி 25 தொகுதியிலும் 125 உறுப்பினர்கள். மத்திய குழு உறுப்பினர்கள் 41. எனவே மொத்தம் 166 உறுப்பினர்களே பொதுச் சபை அங்கத்தவர்கள் ஆகும். (விதி 07 (ஆ))

ஆனால் தலைவர் தெரிவின்போது 321பேர் வாக்களிப்பில் பங்கேற்றிருக்கின்றார்கள்.

## இது எப்படி நடந்தது?

இதுதான் தமிழரசுக் கட்சியினுடைய யாப்பின் விசித்திரம். தலைமையின் சிறப்பு.

மேலும் சொல்வதென்றால், யாப்பு விதியின்படி தலைவர் தெரிவின் பின்னரான அனைத்துத் தெரிவுகளையும் புதிய தலைவரின் தலைமையில் பொதுச்சபையே தீர்மானித்திருக்க வேண்டும். எந்தச் சூழலிலும் மத்தியசெயற்குழு கூட்டப்பட்டு பதவிநிலைகள் தீர்மானிக்கப்படும் என்றோ அதற்கு பொதுச்சபையிடத்தில் அனுமதி பெறும் முறைமையொன்று யாப்பில் கூறப்படவில்லை.

ஆனால், இதையெல்லாம் மீறியே செயலாளர் தெரிவு உட்பட ஏனைய விடயங்கள் நடந்தன. ஏறக்குறைய புதிய தலைமை உட்பட நிருவாகத்தெரிவு விடயத்தில் யாப்பைக் கடந்து 15 க்கும் மேற்பட்ட விடயங்களை சென்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"எல்லாத்துக்கும் நாங்கள் யாப்பை வைத்துத்தான் செயற்பட வேண்டுமென்றில்லை" என்று அதனுடைய தலைவர் மாவை சேனாதிராஜா இந்த நெருக்கடிகளின்போது சொன்னதை இங்கே நினைவு கொள்ளலாம். தமிழ் மக்களின் மிகப் பெரிய கட்சி, பாரம்பரியம் மிக்க கட்சியின் நிலைமையையும் நடத்தைச் சிறப்பையும் பார்த்தீர்களா?

இப்படிச் சொன்ன மாவைக்கு நீதிமன்றம் தக்க பாடம் படிப்பித்துள்ளது.

ஆம், இது போன்ற தவறுகளால் யாப்பு, இப்பொழுது கட்சிக்கே ஆப்பு வைத்துள்ளது. அதாவது யாப்பின் பலவீனங்களும் யாப்பைப் பலவீனப்படுத்தும் விதமாக மேற்கொள்ளப்பட்ட தலைமை உறுப்பினர்களின் செயல்களும் கட்சியை முடக்கும் நிலைக்குள்ளாக்கியுள்ளன. கட்சியைச் சந்தி சிரிக்க வைத்துள்ளன. யாப்புத் தவறுகளை முன்னிறுத்தியே யாழ்ப்பாணம், திருகோணமலை நீதிமன்றங்களில் கட்சிக்கு எதிரான வழக்குகள் யாப்பு விதிகளை வலியுறுத்தும் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்டன. இவ்வளவுக்கும் தமிழரசுக் கட்சிக்குள் ஏராளம் சட்டவாளர்கள் உள்ளனர். கட்சியின் உருவாக்குநர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திருச்செல்வம், நாகநாதன் தொடக்கம் சம்பந்தன், சுமந்திரன், தவராஜா வரையில் பல சட்டவாளர்கள். இருந்தும் யாப்புக் குழப்பமும் குறைபாடுகளும் நீடிக்கிறது என்றால் பதவியில் குறியாக இருப்பதைப்பற்றியே ஒவ்வொருவரும் சிந்திக்கின்றனரே தவிர, கட்சியின் எதிர்காலத்தையோ மக்கள் நலனையோ அல்ல என்பது தெளிவாகிறது.

இந்தத் தவறுகளிலிருந்தும் இந்தப் போக்கிலிருந்தும் தமிழரசுக் கட்சி தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆனால் அது எளிய விடயமல்ல. அப்படிச் செய்ய வேண்டும் என்றால் கட்சியின் தலைமைப் பதவியிலிருப்போரும் மூத்த தலைவர்களும் தங்களைச் சுய விமர்சனத்துக்குள்ளாக்க வேண்டும். கூடவே பல நிலைகளில் விட்டுக் கொடுப்புகளைச் செய்ய வேண்டும். அதாவது தகிடு தத்தங்களைக் கைவிட்டு, கட்சியை நேர்மையாக வழிநடத்த வேண்டும். யாப்பு விதிகளை முறையாகப் பின்பற்றுவதுடன், அதிலுள்ள குறைபாடுகளும் களையப்பட வேண்டும்.

## இதற்கு யார் தயார்?

அடுத்தது, வாய்ப்பேச்சு அரசியலிலிருந்து விடுபட்டுச் செயற்பாட்டு அரசியலில் தமிழரசுக்கட்சி தன்னை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். தமிழரசுக் கட்சியின் அரசியல் போதாமைகளை - அதனுடைய வளர்ச்சியின்மையைப் பார்க்க வேண்டும் என்றால் 1960, 1970 களின் சுதந்திரன் பத்திரிகையையும் இப்பொழுது தமிழரசுக் கட்சியின் தலைவர்களின் பேச்சுகளையும் கவனித்தால் இது தெரியும்.

அன்றும் இன்றும் அது வெறும் பிரகடனங்களை வாய்ச்சவடால்களாக அடிப்பதையே தன்னுடைய அரசியல் முறைமையாகக் கொண்டுள்ளது. அது அரசாங்கத்துக்கு 50 ஆண்டுகளாக விடுத்த எந்த எச்சரிக்கையும் கண்டனமும் பதிலடியும் விளைவுகளை உண்டாக்கியதில்லை. பதிலாக அவற்றைக் குறித்து மக்கள் சிரிக்கும் நிலையே உருவாகியது. இறுதியில் தீபாவளிக்குத் தீர்வு, பொங்கலுக்குத் தீர்வு என்று தலைவர் சம்பந்தன் சொன்னதை வைத்துச் சம்பந்தனையே பகடி செய்யத் தொடங்கினர் சனங்கள். ஆழ்ந்து நோக்கினால் தமிழரசுக் கட்சியின் கையாலாகத்தனத்தை இதில் உணரலாம்.

ஆகவே 75 ஆண்டுகால அரசியற் பயணத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு எத்தகைய அரசியல் வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்தது? தமிழ் மக்களுடைய அரசியல், பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சிக்கும் நிலப் பாதுகாப்புக்கும் என்ன வகையிலான பங்களிப்புகளைச் செய்தது? அவற்றின் விளைவுகள் எவ்வாறான நற்பலன்களை விளைத்துள்ளன என்றும் கணக்கிட வேண்டும். கட்சியும் அதை மக்களுக்குச் சொல்ல வேண்டும். அந்தக் கடப்பாடு இன்று தவிர்க்க முடியாமல் உருவாகியுள்ளது. குறைந்த பட்சம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய மறுவாழ்வுப் பணிகளிலும் யுத்த அழிவுப் பிரதேசங்களை மீளுயிர்ப்புச் செய்வதிலும் அது ஆற்றிய பணிகள் என்ன? அதனுடைய பெறுமானங்கள் - அடையாளங்கள் என்ன என்றும் அது தெளிவுபடுத்த வேண்டும். மூத்தகட்சி, பெரிய கட்சி என்ற அடிப்படைத் தகுதியை அது கொள்வதாக இருந்தால் இன்று உலகமெங்கும் பரவிப் பலமடைந்திருக்கும் புலம்பெயர் மக்களை அது ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும்.

அதைப்போல அது, தன்னுடைய ஒழுங்கமைப்பின் கீழும் ஒருங்கிணைப்பிலும் ஏனைய தமிழ்க்கட்சிகளைச் சேர்த்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல், அதற்கு எதிராக, ஏற்கனவே ஒருங்கிணைந்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே சிதைத்தது. தமிழரசுக் கட்சியின் ஜனநாயக மறுப்பும் எதேச்சாதிகாரப் போக்குமே ஏனைய பங்காளிக் கட்சிகள் விலகிச் செல்லக் காரணமாகின.

## இதையெல்லாம் யார் மறுக்க முடியும்?

இப்படிச் செயற்பாடு எதுவுமே இல்லாமல், எதிர்மறையாக மக்களுக்கும் சமூகத்துக்கும் விளைவுகளை - பாதிப்புகளை உண்டாக்கும் கட்சியை எளிதில் சீராக்க விட முடியாது. அதற்கு மிகப் பெரிய அளவில் மாற்றத்தை உள்ளேயும் வெளியேயும் உருவாக்க வேண்டும். இதற்கு அது தன்னுடைய வெற்றுப் பிரகடனங்களிலிருந்து விடுபட வேண்டும். மக்களையும் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் ஏமாற்றும் அரசியலைக் கைவிட வேண்டும்.

வேண்டப்படும் எந்த மாற்றத்தையும் செய்யாமல் இன்னும் அது தமிழ் மக்களின் தலைமைக் கட்சியாகப் பேராதரவோடு இருக்கிறது என்றால்.

தமிழ் மக்களின் அரசியற் தலைவிதியை என்னவென்று சொல்வது?

அடுத்தது, தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்துக்கான அரசியலைப் பற்றியது.

தமிழரசுக் கட்சிக்குள் இரண்டு வகையான அரசியற் போக்குண்டு.

1. சம்பந்தன், சுமந்திரன், குகதாசன் போன்றோர் முன்னெடுக்கின்ற ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற வகையிலான அரசியல். இதற்காக அவர்கள் முஸ்லிம், மலையக, சிங்களத் தரப்பினரோடும் ஒரு மென்னிலை இணக்கப்பாட்டு உறவைப் பேணி வருகின்றனர். கூடவே விடுதலைப் புலிகள் முன்னெடுத்த தீவிர நிலைப்பாட்டை தவிர்க்கின்றனர்.

2. சிறிதரன், மாவை, அரியநேத்திரன், சிறிநேசன் போன்றோர் முன்னெடுக்கும் தீவிரத் தமிழ்த்தேசியவாத அரசியல். இதற்கான செயல்வடிவத்துக்கு அப்பால், இவர்கள் விடுதலைப் புலிகளின் தொடர்ச்சி தாமே என்று கருதிக் கொண்டு மேற்கொண்டு வரும் தனியாவர்த்தனம்.

இதுவரையிலும் கூட இந்த இரண்டு போக்குகளும் கட்சிக்குள்ளிருந்தன. ஆனால் இப்போதுள்ளதைப்போல அதுவொரு பெரிய வெடிப்பாக வரவில்லை. இந்த இரண்டு போக்குகளையும் பயன்படுத்தி அரசியல் அறுவடையைத் தமிழரசுக் கட்சி செய்து வந்தது. சிறிதரன் புலிக்கொடியை ஏந்துவார். சம்பந்தன் சிங்கக் கொடியைத் தூக்குவார். புலிகளை ஆதரிப்போரின் வாக்குகளும் அதற்குக் கிடைத்தன. அவர்களை எதிர்ப்போரின் வாக்குகளும் கிடைத்தன.

## இதற்கான முடிவு ஏறக்குறைய வந்துள்ளது எனலாம்.

அடுத்தது, இப்போதுள்ள நிலையில் சிறிதரன் அணி மீண்டும் (நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு) தலைமையேற்றால் இன்னொரு பிரச்சினை தமிழரசுக் கட்சிக்குண்டு. சிறிதரன் மேற்கொள்கின்ற அதே தீவிர அரசியலையே கஜேந்திரகுமாரின் அணியும் மேற்கொள்கிறது. ஆகவே இரண்டு தரப்பும் களத்தில் நேருக்கு நேர் மறுபடியும் மோதக் கூடிய நிலை ஏற்படும்.

இது முன்னொரு காலம் அகில கஜேந்திரகுமாரின் பாட்டனாரான ஜீ.ஜீ. பொன்னம்பத்தின் இலங்கைத் தமிழ்க்காங்கிரசும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் மோதியதைப்போன்றிருக்கும்.

ஆனால் அன்று வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் மோதல் நடந்தது. அதனால் ஜீ.ஜீ. தோற்றார். செல்வநாயகம் வென்றார். இங்கே இருதரப்பும் ஒரே நிலைப்பாட்டில் மோதப் போகின்றன. ஆகவே இது மீளவும் தமிழரசுக் கட்சிக்கு இன்னொரு நெருக்கடியாகவே இருக்கும். அதே வேளை அது இந்த நிலைப்பாட்டில் இருந்தால் தமிழ்ச்சமூகம் மேலும் நெருக்கடியைச் சந்திப்பதோடு, நாட்டிலிருந்து வெளியேறுவோரின் எண்ணிக்கையை மேலும் கூட்டும்.

சுமந்திரன் தரப்பு வெற்றியடைந்தால் அதுவும் நெருக்கடியைச் சந்திக்கும். இனப்பிரச்சினையைத் தீர்ப்பது - அரசியற் தீர்வைக் காண்பது தொடக்கம் தமிழ்ச்சமூகத்தை பொருளாதாரம் உட்பட அனைத்துத் தளங்களிலும் கட்டியெழுப்பும் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். இது எளிதான விசயமல்ல.

இதற்கும் கடுமையாக உழைக்க வேண்டும்.

ஆகவே தமிழரசுக் கட்சிக்கு தொடர் நெருக்கடிகளும் தவிர்க்கவே முடியாத கடப்பாடுகளும் (பொறுப்புகளும்) வரலாற்று ரீதியாக வந்து சேர்ந்துள்ளன. இனியும் அதனால் முன்னரைப்போல சுழித்தோட (தப்பியோட) முடியாது. பொறுப்புச் சொல்லியே ஆக வேண்டும்.



# அகம், புறம், சங்க(ம)ம்

## அகலிரு விசும்பின் மீனினும் பலரே (தேடலின் தவிப்பு)

நம்மைத் துக்கப்படுத்தும் எதையும் அவ்வளவு எளிதில் ஒதுக்கிவிட முடியாது. இந்த பிரபஞ்சத்தை இயக்கும் விதிகளின்படி, பொம்மையைத் தொலைத்த ஒரு குழந்தையின் இழப்பும் , நாட்டினை இழந்த ஒரு ராஜாவின் இழப்பும் அடிப்படையில் ஒரே அளவிலான நிகழ்வுகள் தான் ." - மார்க் ட்வைன்.

எழுத்தாளர் தேவிபாரதிக்கு சாகித்ய அகாடெமி விருது அண்மையில் கிடைத்தது. அதற்காக தேவிபாரதி அமெரிக்காசென்றபொழுது அவரை சந்திப்பதற்காக கனடாவிலிருந்து தானும் ,காலம் செல்வமும் மற்றும் நான்கு நண்பர்களும் சென்று விட்டு வந்ததைப் பற்றிய அ.முத்துலிங்கத்தின் ஒரு அருமையான கட்டுரையைப் படிக்கும் சந்தர்ப்பம் முகநூலில் கிடைத்தது.

தமிழில் இவ்வளவு அருமையான கட்டுரை எழுதுபவர்கள் குறைவு. அதுவும் அ.முத்துலிங்கம் போன்று படிப்பதற்கு சுவாரசியமாக எழுதுபவர்கள் மிகவும் அபூர்வம். கண்டிப்பாக நாம் அனைவரும் தவறாமல் படிக்க வேண்டிய கட்டுரை. அந்தக் கட்டுரையில் தேவிபாரதியை தேடி அமெரிக்க நயாகரா நீர்வீழ்ச்சி அருகே நான்கு மணி அலைந்ததைப் பற்றிக் கூறும் இடத்தில்,மிகவும் அபாரமாக சங்க இலக்கியத்திலிருந்து மேற்கோள் காட்டியிருப்பார்.

"குறுந்தொகையில் ஒரு பாடல் உண்டு, வெள்ளிவீதியார் எங்களுக்கென்று பாடியதுபோல. 'கால்கள் அலுத்தன, கண்கள் தேடித்தேடி மங்கின. வானத்து நட்சத்திரங்களையும் விட அதிகமாக இருந்தனர், மற்றவர்கள்." இதை படித்த பிறகு உடனே தொடர்ந்து வெள்ளிவீதியார் எழுதிய பாடலை தேட துவங்கினேன். குறுந்தொகையில் 48ஆவது பாடலாக வரும் பாடலது .

காலே பரி தப்பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற விவ் வுலகத்துப் பிறரே.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

**இயற்றியவர்:** வெள்ளிவீதியார்

**திணை:** பாலை . (பாலை நிலத்தைப் பற்றி பாடிய பாடல். காடாகவுமில்லாமல், மலையாகவும் இல்லாமல் இரண்டும் கலந்து மயங்கி வெப்ப மிகுதியால் திரிந்த சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை நிலமாகும்..)

**துறை:** செவிலித்தாய் கூற்று (தலைவி தலைவனுடன் போனபின்பு அவர்களைப் பாலை நிலத்தில் தேடியலைந்து கண்டுபிடிக்கமுடியாமல் செவிலி வருந்திக் கூறியது )

காலே பரிதப் பினவே = வீதியெங்கும் தேடியலைந்து கால்கள் நடையிழந்து களைத்தன

பரி என்றால் சீரான நடை. பரிதப்புதல் என்றால் தள்ளாடுதல்

நோக்கி நோக்கி வாள் இழந்தனவே = அவர்கள் வருவார்கள் என்று வழி பார்த்து பார்த்து கண்கள் இரண்டும் ஒளி இழந்தன.

கண்கள் வாள் இழத்தல் என்பது ஒளியும் கூர்மையும் அழிதல் என்று பொருள்.

அகலிரு விசும்பின் = எல்லையற்ற இந்த பிரபஞ்சத்தில்
மீனினும் = நட்சத்திரங்களை விட
மன்ற = நிச்சயமாக

என் கால்கள் நடந்து நடந்து நடை ஒய்ந்தன

என் முன்னால் வருபவர்களையெல்லாம் பார்த்துப் பார்த்து என் கண்கள் ஒளி இழந்தன

நிச்சயமாக, இந்த உலகத்தில், பிரபஞ்சத்திலிருக்கும் விண்மீன்களைக் காட்டிலும் பலர் இருக்கின்றனர் . ஆனால், நான் தேடியலைகிற என் மகள் போன்ற தலைவியை மட்டும் காணவில்லை.

இந்த பாடலின் சூழல் என்னவாக இருக்க முடியும் என்பதை தமிழறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

1. அதாவது தலைவியும் தலைவனும் திருமணம் செய்துகொள்ள அவர்களுடைய பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. ஆதாலால் அவர்கள் தங்கள் பெற்றோரை விட்டு பிரிந்து ஊரை விட்டு ஓடிவிட்டிருக்கலாம் . அவர்களை தேடியலையும் செவிலித்தாய்

2. தன்னை விட்டு பிரிந்து சென்ற தலைவனைத் தேடி சென்ற தலைவியைக் காணவில்லை. அவர்களை தேடியலையும் செவிலித்தாய்.

3. மூன்றாவது தன்னை விட்டு பிரிந்து சென்ற தலைவனை தேடியலையும் தலைவி

இப்படித் தேடியலையும் பெண்களின் பரிதவிப்பை சொல்லும் அருமையான பாடலது. இந்தப் பாடலைக் கவனித்தால் அன்பானவர் விட்டுச்சென்றால் அல்லது காணாமல் போனால் மனம் எப்படியெல்லாம் பரிதவிக்கும். என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு படத்தில் வரும் பாட்டு கூட இந்தக் குறுந்தொகைப் பாடலை தழுவியது தானோ தெரியவில்லை.

"காலெல்லாம் நோகுதடி கண்ணே உன்னைத் தேடி
என் கண்ணெல்லாம் கிறங்குதடி கனியே உன்னைத் தேடி"

"இந்த அகன்ற வானில் மின்னும் அத்துணை நட்சத்திரங்களுக்கிடையே என் கண்ணுக்கு கண்ணான நட்சத்திரத்தை மட்டும் காணவில்லை. எப்படி கண்டுபிடிப்பேன் " என்று துயரத்தை ,கையறு நிலையை எடுத்துச் சொல்கிறாள் பாடல் தலைவி. ஒளிர்ந்து மறையும் நட்சத்திரங்கள் இந்த உலகிலுள்ள மற்றவர்கள் ,ஆனால் என் கண்மணியோ என்றும் ஒளிரும் மங்கா சூரியன் என்று பொருள்கொள்ளவேண்டும். ■



# புதுவருட ராசிபலன்



## மேடம்

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் ஏற்றமிகுந்த மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படும். செலவுகளும் அதிகமாகவே ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. உடல் நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் இருக்கும் நபர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைப் பெற முடியும். வேலையைப் பொறுத்தவரை வேலை சூழ்நிலை சாதகமாகவே இருக்கிறது. வேலைச் சுமை அதிகமாக இருந்தாலும் அதைத் திறம்படச் செய்து முடிப்பீர்கள். இதுவரை தடைப்பட்டிருந்த பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது.

## இடபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் ஏற்ற இறக்கம் நிறைந்த மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படும். அதே சமயம் சுப விரயங்கள் ஏற்படுவதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது. உடல் நலனில் கவனம் தேவை. கணவன்- மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது மிகுந்த நன்மையைத் தரும். வேலையைப் பொறுத்தவரை வேலைச் சுமை சற்று அதிகமாகவே இருக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு துர்க்கை அம்மை வழிபட வேண்டும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நினைத்ததெல்லாம் நடக்கும். எதிர்பார்த்ததைவிட அதிக அளவு பணவரவு ஏற்படும். இருப்பினும் சில எதிர்பாராத செலவுகளால் பணத்தைச் சேமிக்கும் சூழ்நிலை உருவாகாது. உடல்நலம் சீராக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். நீண்ட நாட்களாகத் தடைப்பட்டிருந்த காரியங்கள் நடக்க ஆரம்பிக்கும். வேலைச் சுமை அதிகமாக இருந்தாலும் அதைச் சாமர்த்தியமாகச் சமாளித்து எளிதில் வெற்றி பெறுவீர்கள். தொழிலில் இருந்து வந்த தடைகள் அனைத்தும் நீங்கும். தொழில் ரீதியாக மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி அடையும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு விநாயகப் பெருமானை வழிபட வேண்டும்.

## கடகம்

கடக ராசிக்காரர்கள் இந்த மாதம் கவனத்துடன் செயலாற்ற வேண்டும். எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படாது. செலவுகளைச் சமாளிக்கும் அளவுக்கு மட்டுமே பணவரவு உண்டாகும். உடல் நலத்தில் கவனம் தேவை. கணவன் -மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். பிறரிடம் பேசும் பொழுது பேச்சில் பொறுமையைக் கையாண்டால் பிரச்சினைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். கடினமாக உழைத்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்காத சூழ்நிலையே உண்டாகும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு சிவபெருமானை வழிபட வேண்டும்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் அனுகூலங்கள் ஏற்படும். எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படும். இதனால் ஒரு சிலருக்கு சொந்தமாக வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டாகும். உடல் நலத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவுகள் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. கணவன் - மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்த அனுசரித்து செல்வது மிகவும் நன்மையைத் தரும். புதிதாக வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த இடத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு துர்க்கை அம்மனை வழிபட வேண்டும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் தைரியம் மிகுந்த மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்பட்டாலும் வீண் விரயங்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் செலவுகளைச் செய்யும் பொழுது கவனத்துடன் செய்ய வேண்டும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் ஏற்பட்டு நீங்கும். கணவன்- மனைவிக்கு இடையே ஒற்றுமை அதிகரிக்கும். எந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும் அவசரப்பட்டு எடுக்காமல் நிதானத்தையும் பொறுமையையும் கையாள வேண்டும். வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருக்கும். கூடுதல் கவனம் செலுத்தி வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தால் எதிர்பார்த்த சலுகைகளைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கிறது.

## துலாம்

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் வெற்றிகரமான மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்ததை விட அதிக அளவு பணவரவு ஏற்படும். சுப விரயங்கள் நடைபெறுவதற்குரிய வாய்ப்புகளும் ஏற்படும். உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் தென்படும். கணவன்- மனைவிக்கு இடையே ஒற்றுமை அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றியைக் காண்பீர்கள். வேலைச்சுமை சற்று அதிகமாகவே இருந்தாலும் அதை திறம்பட செய்து முடிப்பதன் மூலம் உயர் அதிகாரிகளின் பாராட்டையும் பெற்று எதிர்பாராத சலுகைகளையும் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. புதிதாக தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் இந்த மாதத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் எதிர்த்து போராடும் மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படாது. ஒரு சிலருக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கிறது. கணவன் -மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு நீங்கும். வேலையைப் பொறுத்தவரை வேலைச் சுமை சற்று அதிகமாகவே இருக்கும். அந்த வேலையை வேகத்துடனும் விவேகத்துடனும் செய்து முடிப்பதன் மூலம் நல்ல பலனை பெற முடியும். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாக திகழ்வதற்குத் தட்சிணாமூர்த்தியை வழிபட வேண்டும்.

## தனுசு

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நெருக்கடிகள் குறையும் மாதமாகத் திகழப் போகிறது. பொருளாதாரத்தை பொறுத்தவரை எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படும். கடந்த காலங்களில் தடைபட்டிருந்த பணவரவு இந்த காலத்தில் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. உடல் நலம் சீராக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மையைத் தரும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்குரிய வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. வேலையைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலையே நிலவுகிறது. இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு அஷ்டலட்சுமிகளை வழிபட வேண்டும்.

## மகரம்

மகர ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் திருப்திகரமான மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படும். உடல் நலனில் இருந்து வந்த பிரச்சினைகள் படிப்படியாகக் குறைய ஆரம்பிக்கும். கணவன் -மனைவிக்கிடையே ஒற்றுமை அதிகரிக்கும். திருமண முயற்சிகள் வெற்றியை தரும். வேலைச் சுமை சற்று அதிகமாகவே இருக்கும். வேலையில் கூடுதல் கவனம் செலுத்தி செய்வதன் மூலமும் முன்னர் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்வதன் மூலமும் இதிலிருந்து விடுபடலாம். இந்த மாதம் மேலும் சிறப்பு மிகுந்த மாதமாகத் திகழ்வதற்கு ஆஞ்சநேயரை வழிபட வேண்டும்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் பொறுமையுடன் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்படாது. வரவைக் காட்டிலும் செலவு அதிகமாகவே ஏற்படும். இருக்கும் உடல் நலனில் கவனம் தேவை. கணவன்- மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முன்கோபத்தை தவிர்த்துக் கொள்வது நன்மையை தரும். வேலைச் சுமை அதிகமாகவே இருக்கும். கடினமாக உழைத்தாலும் அதற்கேற்ற பலன் கிடைப்பது அரிதாகவே இருக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பது சற்று காலதாமதம் ஆகும். கொடுக்கல்- வாங்கல் விஷயங்களில் கவனம் தேவை. ஒரு முறைக்கு பலமுறை யோசித்து புதிதாக முயற்சிகளை செய்ய வேண்டும்.

## மீனம்

மீன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நிதானத்துடன் செயலாற்ற வேண்டிய மாதமாகத் திகழப்போகிறது. பொருளாதாரத்தை பொறுத்தவரை எதிர்பார்த்த அளவுக்கு பணவரவு ஏற்பட்டாலும் வீண் விரயங்கள் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கணவன்- மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக இருப்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து புரிந்து கொண்டு செல்வது நன்மையைத் தரும். வேலைச் சுமை சற்று அதிகமாகவே இருக்கும். நிதானத்துடனும் பொறுமையுடனும் வேலையில் கவனம் செலுத்தி செய்வதன் மூலம் உயர் அதிகாரிகளின் கோபத்தில் இருந்து தப்பிக் கொள்ளலாம்.


இன்றைக்கு
என்ன நாள்
என்ற கட்டம்
விக்டோரியாவின் குளியல் அனுபவங்கள் வீட்டிலிருந்து ஒரு குறுகிய பயணமே, ஆனால் நிஜ உலகில் இருந்து ஒளி ஆண்டுகள் தொலைவில். அந்த அதிசய உணர்வால் அச்சம்கொள்ள வேண்டாம் – உங்கள் உள அழுத்தம் உருகி ஓடும் உணர்வே அது.
ஆல்பா தெர்மல் ஸ்பிரிங்ஸ் & ஸ்பா போன்ற புத்துயிர்ப்பூட்டும் இடங்களில் ஓய்வுபெறுங்கள்.
VISITVICTORIA.COM
VICTORiA
ஒவ்வொரு கட்டமும் வித்தியாசம்

Transscco™ CARGO

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU